மலர்-1 இதழ்-16 ஏப்ரல் 16-30 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்







# பாவத்தை சேர்க்கும் சிறப்பு, வி.ஐ.பி., தரிசனங்கள்

தற்போதைய காலகட்டத்தில் இந்துக் கோவில்களும், இந்துமதமும், அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பணத்தை சம்பாதித்துக் கொடுக்கும் ஒரு மிகப் பெரிய நிறுவனமாக மாறிவருகிறது என்பதை கண்கூடாக அறிய முடிகிறது.

மக்கள் மனதில் உள்ள சுமையையும், வேதனையையும் போக்கும் கோவில்களில், தற்போது சுவாமி சிலைகளை வெறும் காட்சிப் பொருளாக மாற்றி வைத்துள்ளனர். இன்னும் சொல்லப் போனால் கோவில்கள் உருவாக்கப் பட்டதன் நோக்கமே அழிக்கப்பட்டுவிட்டது என்றுதான் தோன்றுகிறது.

எவ்வளவு மனக் கஷ்டம் இருந்தாலும், கோவிலுக்கு சென்று அழகிய குளக்கரையில் கால்களை தண்ணீரில் நனைத்து, குளக்கரையில் சிறிது நேரம் அமர்ந்து குளத்தை ரசித்துவிட்டு, மனதில் தோன்றிய பாரத்தில் சிறிதளவை குளக்கரையில் இரக்கிவிட்டு, மீதி பாரத்துடன் கோவிலுக்கு சென்று சுவாமியை மனதார வணங்கியபின், கோவிலில் அமர்ந்து இயற்கை காற்றையும் அமைதியான சூழ்நிலையையும் அனுபவித்த பின், மீதி இருந்த மனபாரமும் குறைந்து, மனித மனம் புத்துணர்ச்சி பெற்று மிகுந்த தெளிவு பெற வேண்டும் எனற நல்ல நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட கோவில்களின் இன்றைய நிலை....

குளம் இருந்தால் தண்ணீர் இருக்காது, அப்படியே தண்ணீர் இருந்தாலும் பாதுகாப்பு என்ற பெயரில் குளத்தை சுற்றி சுற்றுச் சுவரை கட்டி அதற்கு ஒரு இரும்பு கேட் வைத்து பூட்டு போட்டு பூட்டிவைத்துவிட்டனர் (அந்தக் காலத்தில் குளத்தை சுற்றி எந்த வேலியும் போடவில்லை ஆனாலும் பாதுகாப்புடன்தான் இருந்தது).

கோவிலுக்கு போனால் இயற்கைக்கு மாறாக கோவில் முழுவதும் டைல்ஸ் போட்டும், வலம் வரும் பாதையை சுற்றி வானமே தெரி யாத அளவிற்கு தடுப்பு போட்டு இயற்கை காற்று சற்றும் கோவிலுக்குள் நுழையாத வண்ணம் கோவிலையே ஒரு கூண்டு போல் மூடிவைத்துவிட்டு, திருவிழா சமயங்களில் மக்கள் கூட்டம் அலைமோதும் போது மூச்சுக் காற்றுக்கூட விஷக்காற்றாக மாறும் அளவுக்கு, திறந்த வெளியே இல்லாமல், கோயில் நுழைவு வாயில் முதற்கொண்டு கர்ப்ப கிரகம் வரை தகரம் போன்றவற்றால் மூடப்பட்டு கோவிலையே கூண்டாக மாற்றி வைத்துவிட்டனர். அனைவரையும் பாதுகாக்கும் கடவுளையே சிறைக்குள் அடைத்து காட்சிப் பொருளாக மாற்றிவைத்துள்ளனர்.

**இறைவன் ஜாதியையும், வசதி வாய்ப்பையும் பார்த்து அருள் செய்வதில்லை, உண்மை பக்தியையும், அன்பை மட்டுமே இறைவன் ஏற்பான் என்பதற்கு பல்வேறு புராண கதைகள் உண்டு**

இதில் இன்னொரு கொடுமை என்னவென் றால் சுவாமியை விரைவாகவும், அருகிலும் தரிசிக்க 100 ரூபாய் முதற்கொண்டு பல ஆயிரம் ரூபாய் வரையில் சிறப்பு தரிசன டோக்கன் விற்பனையையும் துவக்கி வைத்து, ‘பணம் இருப் பவர்களுக்குத்தான் சுவாமி தரிசனம் கிடைக்கும்’ என்ற நிலையை உருவாக்கி வைத்து விட்டனர்.

இன்னும் ஒருபடி மேலாக சொன்னால் அர்ச்சனை தட்டில் 100 ரூபாய் போட்டால் சுவாமி கழுத்தில் இருக்கும் மாலையை பிடுங்கி, அர்ச்சனை தட்டில் 100 ரூபாய் போடுபவரின் கழுத்திலும் போடுகின்றனர். ஆக மொத்தம் கடவுளை வைத்து பணம் சம்பாதிக்கும் மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனமாகவே கோவில் தற்போது மாறி விட்டது.

மனிதர்களை ஒரு காலத்தில் ஜாதியால் பிரித்து வைத்திருந்த நிலை மாறி, தற்போது பணத்தால் பிரித்துவைத்துள்ளது நமது சமூகம், முற்காலத்தில் உயர் ஜாதியினருக்கு மட்டும் மரியாதை செய்யப்பட்ட நிலை மாறி தற்போது பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே மரியாதை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

## பாவம் எப்படி வந்து சேரும்?

‘‘பணக்கஷ்டமா இருக்குன்னு கோவிலுக்கு போனேன் அங்க சிறப்பு தரிசனம் ரூ.100ன்னு சொன்னாங்க நம்மளவிட சாமி பண கஷ்டத்துல இருக்கிறார்ன்னு திரும்பி வந்துட்டேன்’’

இப்படி பலபேரால் கேலி செய்யும் நிலைக்கு கடவுள் தள்ளப்பட்டதற்கு காரணம் யார்? இந்த கேலியால் விளையும் பாவம் யாரைச் சென்ற டையும்.

உண்மையில் இறைவன் ஜாதியையும், வசதி



ஆன்மிகமலர் மெயில் புக்






வாய்ப்பையும் பார்த்து அருள் செய்வதில்லை, உண்மை பக்தியையும், அன்பை மட்டுமே இறைவன் ஏற்பான் என்பதற்கு பல்வேறு புராண கதைகள் உண்டு.

நந்தனாரை, ஜாதியை காரணம் காட்டி ஒதுக்கி வைக்கப்பட்டு கோவிலுக்குள் அனுமதிக்காத போது, கோவிலுக்கு வெளியே நின்றிருந்த நந்தனாருக்கு தரிசனம் தர நந்தியை விலகி நிற்குமாறு சிவபெருமான் உத்தரவிட்டு, நந்தனாரை ஆட் கொண்ட வரலாறும், வசதி படைத்த அரசன் கட்டிய கோவிலை ஏற்காமல் ஏழையான தனது பக்தன் மனதால் கட்டிய கோவிலுக்கு முன்னுரிமை தந்த சிவபெருமானின் லீலைகள் நிறைந்தது இந்து மதம்.

குணத்தால் உயர்ந்தும், பக்தியால் உயர்ந்தும், வசதி வாய்ப்பில் பின்தங்கி இருந்தாலும் உண்மை பக்தனாக இருப்பவர்கள் சுவாமி தரிசனத்திற்கு காத்திருக்கும் சமயத்தில், பணத்தால் மட்டும் உயர்ந்தவர்களுக்கு, முன்னுரிமை தரப்படும்போது, உண்மையான பக்தர்கள் மனதளவில் கோபப் பட்டாலும், மனவருத்தம் அடைந்தாலும், அந்தப் பாவம் சுவாமி தரிசனத்திற்கு முன்னுரிமை தந்தவரையும், பெற்றவரையுமேசாரும். இந்து கோவில் சாஸ்திரங்கள் படி, எந்த ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும், எந்த வகையிலும், இறைவனைவிட முக்கியத்துவம் தரக்கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. போர்க் காலங்களில், இறைவனை வணங்கிவிட்டு போரிட செல்லும் மன்னன் மட்டும் இறைவன் தனிப்பட்ட முறையில் பூஜிக்க சாஸ்திரம் வகுக்கப்பட்டிருந்தது.

> “திருக்கோவில் சாஸ்திரப் படி, எந்த ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும், எந்த வகையிலும், இறைவனைவிட முக்கியத்துவம் தரக்கூடாது என்று வரையறுக்கப் பட்டுள்ளது”

போரில் ஒரு சில மனித்துளி கூட வீணாகக் கூடாது என்பதால் மன்னன் இறைவனின் ஆசி பெற முக்கியத்துவம் தரப்பட்டது. மற்றபடி இறைவனை பொது மக்களுடன் மக்களாக மட்டுமே வழிபடவேண்டும் என்று சாஸ்திரம் உண்டு.

ஆனால் இன்றையநிலையில், சாஸ்திரங்கள் மறைக்கப்பட்டு, வசதி, வாய்ப்பு, பணம் போன்றவை முன்னின்று, உண்மையான பக்தர்களுக்கு மனஉளைச்சலையும், இடையூறுகளையும் ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது.

உண்மையான பக்தர்களின் சாபத்தையும், வயிற்றெரிச்சலையும் சிறப்பு தரிசனம் என்ற பெயரில் சொகுசாக அனுபவிப்பர்கள் பெற்றுச் செல்கிறார்கள் என்பது தான் உண்மை.

பல மணிநேரம் கால்கடுக்க நிற்கும் உண்மை பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு காரணமாகாமல், அவர்களின் சாபங்களையும் பெறாமல் நாம் தவிர்க்க வேண்டுமென்றால், சிறப்பு தரிசனத்தில் செல்லாமல் பொது மக்களுடன் இறைவனை வழிபடுவது ஒன்றுதான் தீர்வு.

அதுவும் முடியவில்லையென்றால் வெளியில் நின்று மனதார இறைவனை பிரார்த்தனை செய்துவிட்டு, இயலாதவர்களுக்கு அவர்களின் தேவையான உணவுப்பொருள் போன்றவற்றை வாங்கி கொடுத்துவிட்டு மனதார இறைவனை வணங்கினாலேயே இறைவனின் அருளுக்கு நாம் பாத்திரமாகலாம். உடலாலும், மனதாலும் பாதிக்கப்பட்டவர் களுக்கு இறைவனை காண முன்னுரிமை தரலாமே தவிர, வசதி, மற்றும் அதிகார வாய்ப்பு உடைய மனிதர்கள் இறைவனை தரிசிக்க முன்னுரிமை தருவது என்பது இறைவனை அவமதிக்கும் செயலாகும்.

கோவில்களில் முதன்மையானவராக கடவுள் தான் இருக்கவேண்டுமே தவிர, அந்த கடவுளைப் பார்க்க வரும் மனிதர்கள் முதன்மையானவராக இருக்கக் கூடாது. செல்வத்தாலும், அதிகாரத் தோரணையாலும் எதையும் சாதிக்கலாம் என்று நினைப்பவர்கள் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தும் எந்த பலனும் இல்லை.

எந்த கடவுளும் இதுபோன்ற மனிதர்களுக்கு எந்த நேரத்திலும் முக்கியத்துவம் கொடுத்தது கிடையாது என்பதுதான் வரலாறு.

செல்வ வளமும், அதிகார பலமும் வைத்திருந்த துரியோதனனுக்கு கிருஷ்ணர் தனது அருட் கடாட்சத்தை தரவில்லை. பக்தியாலும், அன்பாலும் உயர்ந்து நாட்டை துறந்து காட்டில் வசித்த பாண்டவர்களுக்குத்தான் அருட் கடாட்சத்தை தந்தார் என்று வரலாற்று சான்றே விளக்குகிறது. பொருளுக்கும், அதிகாரத்திற்கும், இந்து மதக் கடவுள்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை அன்புக்கும் பக்திக்கும் மட்டுமே கடவுளுக்கு சம்பந்தம் உள்ளது என்பது தெளிவாகிறது.

இனியாவது சிறப்பு தரிசனம், வி.ஐ.பி.தரிசனம் போன்றவற்றில் சென்று, நமது வசதி, அதிகார தோரணையை பயன்படுத்தி இறைவனை தரிசிக்க வேண்டும் என்று எண்ணாதீர்கள். பாவத்தை சுமக்க நாம் கோவிலுக்கு செல்ல வேண்டாம், கோவிலுக்கு சென்று புண்ணியத்துடன் வருவோம்.

ச.நாகராஜன்,
போன்: 8825844033

BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com
SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,
89394 99598
New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# ‘யோகி ராம்சுரத்குமார்’

## (வாழ்க்கை வரலாறு சிறு தொடர்)

கங்கைக் கரையோரம் இருந்தது, அந்தப் பையனின் வீடு. பள்ளி நேரம் போக மீதி நேரங்களில், அந்தப் பையன் கங்கைக் கரையோரம் நடக்கின்ற சாதுக்களுக்குப் பின்னே ஓடுவான். அவர்கள் வட்டமாக உட்கார்ந்து பேசுகிற போது, அவர்கள் பேசுவதைக் கேட்பான். இரவு முழுவதும் அவர்கள் கடவுளைப் பற்றிய விஷயங்களை விவாதம் செய்வார்கள்.

விளைவு மிகச் சிறு வயதிலேயே அந்தப் பையனின் உள்ளத்தில் கடவுள் தேடுதல் என்ற விதை விழுந்தது. அந்தப் பையன் வீரிய வித்தாக இருந்தான். வளர்ந்து மிகப் பெரிய ஆலமரமானான். அந்த ஆலமரத்துக்கு ‘யோகி ராம்சுரத்குமார்’ என்று பின்னால் பெயர் வந்தது.

இயற்பெயர் ராம்சுரத்குன்வர். பள்ளிப் படிப்பில் படுகெட்டி. அவரது குடும்பம், ஒரு விவசாயக் குடும்பம். கங்கைக் கரையோரம் நல்ல விளை நிலங்கள் சொந்தமாக இருந்தன. விவசாய வேலைகள் அதிகம். ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடுபட்டால்தான், அதில் லாபம் என்பது சிறிதளவு கிடைக்கும். எனவே, உழைப்புக்கு அஞ்சாத குடும்பமாக இருந்தது. ஆனால், ராம்சுரத்குன்வருக்கு படித்து பட்டம் பெறுவதில்தான் ஆர்வம். அந்தக் குடும்பத்தில் வேறு எவரும் அப்படி ஈடுபாட்டுடன் இல்லாததால், குடும்பத்தினர் ராம்சுரத்குன்வரை உற்சாகப் படுத்தினர்.

அந்த கிராமத்திலேயே மகான் ஒருவர், தனியே வசித்து, கடவுள் சிந்தனையாக இருந்தார். கிராமத்தினர் அவரிடம் நல்லது கெட்டதுக்குப் போய் பேசிவிட்டு வருவர். ராம்சுரத்குன்வரும், கடவுளைப் பற்றிய கேள்விகளை அவரிடம் வைக்கஞ் ‘இதற்கு நான் பதில் சொல்வதைவிட, நீ காசி விஸ்வநாதரை தரிசனம் செய்து வா, அப்போது புரியும்’ என்றார்.

காசிக்கு பயணப்பட்டார் ராம்சுரத்குன்வர்.







விஸ்வநாதர் கோயிலை அடைந்து கை கூப்பினார். எத்தனை மகான்கள் தரிசித்த சிவலிங்கம். எத்தனை பேர் தொட்டு பூஜித்த இறைவடிவம். எத்தனை அரசர்களும், சக்ரவர்த்திகளும், அவதார புருஷர்களும் இங்கே நுழைந்திருக்கிறார்கள்; மண்டியிட்டு தொழுதிருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட புனித மான இடம்ஞ் அவருக்கு மெய்சிலிர்த்தது.

இந்தப் புண்ணிய பூமியில் நானும் கால் வைத்திருக்கிறேன். நானும் இந்த சிவலிங்கத்தைத் தொடப் போகிறேன். எனக்குள்ளே இருக் கிற இந்த மனமானது, முழுக்க இந்த சிவ லிங்கத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறது. அம்மா சொல்கின்ற அத்தனை கதைகளும் இங்கே நடந்திருக்கின்றன. இந்த இடத்திலே பல அவதார புருஷர்கள் நின்றிருக்கிறார்கள் என்ற தவிப்புடன் அந்த சிவ லிங்கத்தைத் தொட, அதிர்ச்சியாக மிகப் பெரிய மாறுதல் ஒன்று ஏற்பட்டது.

இறை தரிசனம் என்பது கடுமையான உழைப்பில், மும்முரமான முனைப்பில் வருவது அல்ல. ‘அது’வே தன்னைக் காட்டினால் ஒழிய அதைப் புரிந்து கொள்ள முடியாது. இறையே விரும்பித் தொட்டால் ஒழிய, இறை எது என்பதை அறிய முடியாது. அந்த இளம் வயதில் ராம்சுரத்குன்வருக்கு, அற்புதமான இறை தரிசனம், அவர் கேட்காமல் இறைவனால் அவருக்குத் தரப்பட்டது.

இது என்னஞ் இந்த அதிர்ச்சி, உள்ளுக்குள்ளே தெரிந்த வெளி, இந்த மயக்கம்ஞ் இந்தத் தவிப்புஞ் இந்த ஆனந்தம் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அவற்றை வார்த்தையாக்கி வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ளவும் முடியவில்லை. இங்கேஞ் இந்த அற்புதமான கோயிலில் அந்த மூர்த்தியைத் தொட்டபோது ஒரு மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டதே. அப்படி மற்ற இடங்களிலுள்ள மூர்த்திகளைத் தொடும் போதும் ஏற்படுமோ..? உள்ளுக்குள் கேள்வி எழ, ஊர் சுற்றிப் பார்க்க ஆவல் ஏற்பட்டது. ஆனால், வீட்டார் அவரை வேறுவிதமாக வளைத்தார்கள். திருமணத்துக்கு வற்புறுத்தினார்கள். கடைசியில், அவரால் மறுக்க முடியாமல் போனது.

மனைவியின் பிறந்த வீடு சுபிட்சமாக இருந்தது. எனவே, படிக்க ஆசைப்பட்ட ராம்சுரத் குன்வருக்கு மனமுவந்து உதவி செய்தது. ராம்சுரத்குன்வர் காசி சர்வ கலாசாலையில் தொடர்ந்தார். பட்டப் படிப்பு முடித்தார். படித்த ஆங்கில இலக்கியமும், அவருக்குக் கடவுள் தேடலில் அதிகம் உதவி செய்தது. அதற்குள் சில குழந்தைகளுக்கு அவர் தந்தையானார். குழந்தைகளுடன் நேரம் செலவழிக்கவும் மனை விக்கு உதவி செய்யவுமே வாழ்க்கையின் பெரும் பகுதி போயிற்று.

ஆனால், அடி மனதில் இடையறாது காசி தேசத்தில் ஏற்பட்ட அந்த அதிர்ச்சியும், அதுபோல வேண்டுமென்ற ஆவ லும், அதைத் தேடுகின்ற குணமும் இருந்தன. இன்னும் சற்று வயதான பிறகு, கடவுள் தேடலை வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் வந்தது. கூடவே, கடவுள் தேடலை கடைசி வரை செய்ய முடியாமல் போய்விடுமோ என்ற கவலையும் இருந்தது. உண் மையான ஒருவனுக்கு, கடவுள் தேடலும் குடும்ப பாரமும் இடையறாது தொந்தரவு கொடுத்துக் கொண்டேதான் இருக்கும்.

கடவுளை நோக்கி நகரும் போது குடும்பம் இழுக்கும். குடும்பத்தையே சுற்றி வரும்போது கடவுள் நினைப்பு இழுக்கும். நல்ல மனிதனின் இடையறாத போராட்டம் இது. சரியான உறக்கத்தைக் கொடுக்காது; திடுக்கிட்டு எழ வைக்கும்; உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்பது இதுதான்! அவர் இவை இரண்டுக்குமான வேதனையில் தவித்தார். பிரியமான மனைவி; அற்புதமான குழந்தைகள்; நல்ல மாமனார் வீடு; சுகமான தாய் தந்தை. ஆயினும் கடவுள் என்பது வேறு இடத்தில், வேறு எங்கோ இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

பட்டப் படிப்பு முடித்த ராம்சுரத்குன்வருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. பழைய பள்ளிக் கூடம் ஒன்றை, முழுவதுமாகத் தூக்கி நிறுத்த வேண்டிய சந்தர்ப்பம். அந்தப் பள்ளிக் கூடத்துக்கு அடிப்படையான வசதிகள் எதுவும் இல்லை. கரும்பலகையோ, மேஜையோ, நாற் காலியோ, மாணவர்கள் உட்கார்ந்து படிக்க காற்றோட்டமான இடமோ எதுவுமில்லை.

விரிசல் விட்ட சுவர்கள், ஒழுகும் ஓடுகள் என்று சிதிலமாக இருந்தது. அவர் நிர்வாகத்திடம் முறையிட, ‘இது போதும்’ என்று நிர்வாகம் அலட்சியப்படுத்த, அந்தப் பள்ளிக்கு விடுமுறை அறிவித்து பையன்களை வீட்டுக்கு அனுப்பி விட்டார். பள்ளிக்கூடம் சரியாகும் வரை வரத் தேவையில்லை என்று கட்டளையிட்டார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

– கௌரி பிரகாஷ்
செல் 9841920503

# வேண்டுதலை நிறைவேற்றிவைக்கும்
# ஸ்ரீமணிவாசக சுவாமிகள்

சுவாமிகள் வரலாறு: ஸ்ரீமணிவாசக சுவாமிகள் 1937ம் ஆண்டு புரட்டாசி திங்கள் பௌர்ணமி திதி உத்திரட்டாதி நட்சத்திரத்துடன் கூடிய சுபதினத்தில் அவதரித்தார். சின்னஞ்சிறு வயது முதலே சிறந்த தெய்வீக சிந்தனை உடையவராக விளங்கினார். அக்கால கட்டத்தில் அவர்கள் வீட்டிற்கு வந்த பைராகி அவர்கள் சுவாமிகளை நன்கு கவனித்து தெய்வீக லட்சணங்கள் மிகவும் நிரம்பி இருப்பதை கண்ணுற்று அவரின் தாய், தந்தையரை அழைத்து இச்சிறுவனை கண்டிக்கவோ, அலட்சியமாக பேசவோ கூடாது என்றும் அவருடைய வழிக்கே விட்டுவிட வேண்டும் என்றும் அன்போடு சொல்லி சென்றார்கள். சுவாமிகள் ஆன்மீக நாட்டம் அதிகம் உடையவராகி தனது பதினாறாவது வயதில் இமயமலை சென்றார்கள். அங்கு உள்ள சிவானந்த ஆசிரமத்தில் தங்கி யோக கலையும், ஞான பக்குவத்தையும் பெற்று சிறந்து விளங்கினார்கள். அப்பொழுது சிவானந்தர், சுவாமிகளை அழைத்து, உன்தாய் உன்னை காணாமல் மிகவும் வேதனைபடுகிறாள் உடனே நீ அவர்களை போய் பார் என்று சொல்லி அனுப்பி வைத்தார்கள். சுவாமிகள் அங்கிருந்து நேராக கல்கத்தா சென்றார். அங்கு வசித்த வந்த மகான் காளிச்சரண் பட்டாச்சாரியாரிடம் சாக்த்த உபதேசம் பெற்று சாக்த்த உபாசகராக மாறினார். இளம் வயதில் வேதாந்த மார்க்கத்தில் முறையாக பயிற்சி பெற்றாலும், இஷ்ட தெய்வமாகிய காளியின் பக்தராக இருந்தார்கள். சிறந்த சமஸ்கிருத மொழி அறிவு பெற்று வேள்விக்கான முறைகளை நன்கு கற்றும், யாக கர்த்தாவாகவும் விளங்கினார்கள்.

பிறகு தமது இருபதாவது வயதில் மயிலாடுதுறைக்கு வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் வேதாந்த மார்க்கத்திலும், தாந்திரிக மார்க்கத்திலும் பல வழிகளில் சாதனை புரிந்து அதன் உச்சநிலையை அடைந்தார்கள். அதன் பயனாக பெரும் சக்தியை பெற்று தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு ஐயங்களை நீக்கி அருள் செய்தார்கள். இதனிடையே குகானந்தர் என்பவருடைய சீடரான ஸ்ரீ சுப்ரமணிய அய்யரிடம் ஸ்ரீ வித்யா உபதேசம்பெற்று ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளின் வடிவமாகிய ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் உபாசகராகவும் விளங்கினார்கள்.

பௌர்ணமி தினங்களில் அந்த அம்பாளின் நவாவரன பூஜைகளை அன்பர்களுக்காக சிறப்புற செய்வார்கள். கூறைநாடு திருமஞ்சன வீதியில் உள்ள தோட்டத்தில் 1969ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆசிரமம் அமைத்து அதன் உள்ளே குகை போன்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு தவத்தில் அமர்ந்தார்கள். ஆண்டிற்கு ஒருமுறை அதாவது ஜனவரி முதல் தேதி பக்தர்களுக்காக காலை முதல் மாலை வரை வெளியில் வந்து தரிசனம் கொடுத்து ஆசீர்வாதம் தருவார்கள். பிறகு மாலைக்கு மேல் உள்ளே சென்று விடுவார்கள்.



சுவாமிகளை தரிசனம் செய்ய ஏராளமான பக்தர்கள் திரளாக வந்து காத்து கிடப்பார்கள் அன்று தரிசனம் செய்தவர்களுக்கெல்லாம் வாழ்வில் பல மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏற்பட்டது என்பது அனுபவ உண்மை, அந்த ஆசிரமத்தின் அமைப்பானது கூறைபோட்ட ஒரு கட்டிடமும் அதன் முன் மதில் சுவர் உள்ள ஒரு வராந்திரம் இருக்கும். அதன் நடுவில் 6 அடி நீள, அகலம் உள்ள குகை இருக்கும். அதன் வடிவமானது மரக்காயை கவிழ்த்து வைத்தது போல் இருக்கும்.

சுவாமிகள் தன் பிறவியின் நோக்கங்கள் பற்றி நேரிடையாக கூறும்பொழுது தீயதான இந்த கலியுகத்தில் மந்திர ஜபம் பலிக்குமா என்ப தை பைரவ நிலையில் இருந்த நான் அறிந்து கொள்வதற்காக அவதாரம் செய்ததாக கூறி இருக்கிறார்கள். அதை அறிந்த பிறகு தான் தனது 35வது வயதில் திரும்பி சென்று விடுவேன் என்றும் அதனை பற்றி எவராலும் புரிந்து கொள்ள முடியாது என்றும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் உறுதிபட கூறினார்கள். அவர்கள் கூறியது போலவே 01.01.1972ம் ஆண்டு தனது 35வது வயது ஆரம்பித்த உடன் மகாசமதி அடைந்தார்கள் தன்னுடைய உடலை விட்டு ஆன்மா பிரியும் நேரத்தில் தன்னை அழைத்து செல்ல விநாயகர், முருகன், துர்க்காதேவி, காளிதேவி ஆகியோர் வந்திருக்கிறார்கள் என்று தனது சீடர் கலியராஜிடம் கூறினார்கள். அன்று மதியம் 2.30 மணிக்கு சமாதி அடைந்தார்கள். அன்று மாலை 6.00 மணிக்கு சுவாமிகளின் உடலை காவிரி தென்கரையில் வைத்து முறைப்படி சமாதி அமைக்கப்பட்டது. தான் சமாதி அடையும் இடம் எதிர்காலத்தில் வளர்ச்சி அடைந்து பெரும் புகழ் அடையும் நிலை நிச்சயம் வரும் என்றும் உறுதிபட தெரிவித்தார்கள். அங்கு தன்னை தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு சகல உதவிகளையும் செய்து அருள் பாளிப்பேன் என்றும் உறுதிபட கூறி இருக்கிறார்கள்.

சுவாமிகள் சாக்தமுறையை பின்பற்றியவர் ஆகையால் ஸ்மர்னவாசினி ஆகிய பவதாரிணி தேவியை இரவு நடுநிசியில் ருத்ர பூமிக்கு சென்று தியானம் செய்வது வழக்கம் அது போன்ற சமயங்களில் அவரது மனித உருவ வடிவமானது, காளியின் உருவமாகவே கண்டவர்களும் உண்டு அதுபோன்ற சமயங்களில் அவரது உடலில் இருந்து தெய்வீக ஜோதி பரவுவதை பலரும் கண்டு வியந்திருக்கிறார்கள். சுவாமிகள் தெருவில் நடந்து செல்லும் பொழுது அவரின் தெய்வீக பேரொளியால் அங்கு இருக்கின்ற நாய்கள் எல்லாம் அவரை பின்தொடர்ந்து செல்வதை வழக்கமாக கொண்டிருந்தன. அவை அந்த சமயங்களில் குறைப்பதோ, சண்டையிடுவதோ இருக்காது.

ஸ்ரீமணிவாசக சுவாமிகள் ஸ்ரீ பவதாரிணி காளி உபாசகர் இதனால் இங்கு ஸ்ரீ பவதாரிணி காளி தேவிக்கு தனியாக ஆலயம் அமைத்து மிகுந்த விமரிசையாக பூஜைகள் நடைபெற்று வருகிறது. ஸ்ரீ பவதாரிணி காளி என்பதற்கு சம்சாரப் பெருங் கடலிலிருந்து நம்மை கரைசேர்ப்பவள் என்பது பொருள் அவளே அனைத்து சக்திகளுக்கும் ஆதாரம் ஆவாள் அவளே ஆதி அந்தமும் ஆவாள் அனைத்து சக்திகளின் வடிவமும் அவளே முக்குணங்களாகிய சத்வ, ரஜோ, தாமச குணங்களின் வடிவமாவாள்.



கோவிலின் விசேஷமான நாட்கள்: ஒவ்வொரு வருடமும் வரும் சுவாமிகளின் குரு பூஜையானது சுவாமிகள் மறைந்த திதியான மார்கழி மாத பௌர்ணமிக்கு அடுத்த நாள் நடைபெறும் அன்று விசேஷ பூஜைகளும், அன்னதானமும் சிறப்புடன் நடைபெறும். மேலும் சுவாமிகள் அம்பாளை வழிப்பட்ட காரணத்தினால் நவராத்திரி ஒன்பது நாட்களும் மாலை நேரத்தில் விசேஷ பூஜைகளும் விஜயதசமி அன்று விமரிசையாக அபிஷேகமும் நடைபெறும். ஒவ்வொரு அமாவாசைக்கும் மாலை 6 மணிக்கு காளி ஹோமமும் அம்பாளுக்கு அபிஷேகம் மற்றும் பூஜைகளும் நல்ல முறையில் நடைபெறுகின்றன.

கோவிலுக்கு செல்லும் வழி: மயிலாடுதுறை பஸ் ஸ்டாண்டிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் காரிக்கரையின் இக்கரையில் பவதாரிணி காளிகோவில் உள்ளது.

– சியாம் பிரசாத்
செல்: 9865799646

உலக வரலாற்றில் முதன் முறையாக



இலவச
e-mail-book

எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

உங்கள் இ–மெயில் முகவரியை

கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

Whatsup no.7299992699
aanmeegamalar@gmail.com

முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்






# தமிழகத்து பகவதி அம்மன்



பகவதி என்பது பொதுவாக பெண் தெய்வங்களை அழைக்கும் ஓர் சொல். மந்திர வடிவான வாலை, புவணை, திரிபுரை என்ற இந்த மூன்று தெய்வங்களின் மந்திர சக்தியே பகவதி என்பதாகும். பகவதி அம்மன் என்று நாம் கூறும் போது அவள் இந்த மூன்று சக்திகளில் ஒன்றாகவோ அல்லது மூன்றுமாகவோ கருதபடுவாள். அதனல் தான் பெரும்பாலான பெண் தெய்வங்களின் மந்திரங்களின் நடுவே பகவதி என்ற சொல் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரசித்திபெற்ற கோவிலாகும். குமரிஅம்மன் “ஸ்ரீ பகவதி அம்மன்” “துர்கா தேவி” எனவும் பெயர் பெற்றுள்ளார். குமரி அம்மன் குழந்தை வடிவில் அருள்பாலிப்பதாகக் கூறப்படுகிறது. இக்கோவிலின் வழிபாடுகளையும், சடங்குகளையும் “திரு. சங்கராச் சாரியார்” சங்கரா மடம் மூலமாக நடக்க வழிவகைச் செய்துள்ளார். முனிவர் பரசுராமரால் இக்கோவில் நியமனம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கன்னியாகுமரி கடற்கரையில் குமரிஅம்மன் கோயில் அமைந்துள்ளது. சிவனுடன் நடைபெற இருந்த திருமணம் தடைபட்டதால் அம்மன் இங்கு கன்னியாக கோயில் கொண்டுள்ளாள். அம்மன் அணிந்திருக்கும் வைர மூக்குத்தி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். கடலில் இருந்து பார்த்தாலும் பிரகாசமாக தெரியும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பகவதிஅம்மனின் வைரக்கல் மூக்குத்தி ஒளியை கலங்கரை விளக்கம் இருப்பதாக கருதி கடல் வழயாக சென்ற கப்பல் ஒன்று கரையை நோக்கி வந்ததாகவும் அப்போது அந்த கப்பல் பாறையில் மோதி கடலில் மூழ்கியதாகவும் அன்று முதல் கோவிலின் பிரதான நுழைவுவாசலாக பயன்படுத்தப்பட்டு வந்த கிழக்கு வாசல் மூடப்பட்டது. அதன் பிறகு கோவிலின் வடக்கு வாசல் பக்தர்களின் தரிசனத்துக்காக பிரதான நுழைவாசலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கோவிலில் நடக்கும் முக்கிய திருவிழாக்களான ஆடி அமாவாசை, தை அமாவாசை, வைகாசி விசாகத் திருவிழா, நவராத்திரி திருவிழாவின் கடைசி நாளான பரிவேட்டை திருவிழா மற்றும் கார்த்திகை தீபத்திருவிழா ஆகிய 5 விசேஷ நாட்களில் மட்டும் கோவிலின் கிழக்கு வாசல் திறக்கப்பட்டு அம்மனை கடலில் ஆராட்டி கோவிலுக்குள் எழுந்தருள செய்யும் நிகழ்ச்சி நடக்கும்.

அதுவும் 1 மணி நேரம் மட்டுமே இந்த கிழக்கு வாசல் திறக்கப்பட்டு இருக்கும் மற்ற நாட்கள் முழுவதும் இந்த கிழக்கு வாசல் மூடியே இருக்கும். அப்படிப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க கன்னியாகுமரி பகவதிஅம்மனின் கிழக்கு வாசல் முன்பு அமைந்துள்ள கடற்கரையில் நின்றுதான் சுற்றுலா பயணிகள் அதிகாலையில் சூரியன் உதயம் ஆகும் காட்சியை பார்த்து ரசிப்பது வழக்கம்.

கன்னியாகுமரி ஆலயத்தின் தலப்புராணம் தரும் செய்திகள் இவ்வாலயத்தைச் சுற்றி அழகுற அமைந்திருக்கும் இயற்கை அழகினை ஒத்த சிறப்புடையனவாகக் காட்டுகின்றன.

இராமபிரான் ஆழ்க்கடல் கடந்து இலங்கை செல்வதற்கேற்ற இடம் தேடிக் குமரிமுனை வந்து முதலில் பாலம் போட, அது சரிவராததால் அன்னை பகவதியை தரிசித்து அருள் பெற்று இராமேஸ்வரம் சென்றதாகவும், அதுமுதல் குமரித்துறை “ஆதிசேது” எனப்பெயர் பெற்றதாகவும், கோவில் தலப்புராணம் கூறுகின்றது.

முக்கடலும் கூடும் இடம் குமரிமுனை. காசி சென்று வழிபட்டோர், கன்னியாகுமரி வந்து குமரி பகவதியை வணங்க வேண்டும் என்பது இந்துக்களுக்கோர் சிறந்த விதியாகும்...

# அக்ஷய திருதியை

## ஒரு ஆன்மீக கொண்டாட்டம்

### மூன்றரை நாட்களும் நல்ல நேரமே:

வருடத்தில் மூன்றரை நாட்கள் மிகவும் விசேஷமானவை. இந்த நாட்களுக்கு என்ன சிறப்பு என்றால் இந்நாட்களில் நல்ல நேரம் பார்த்து எந்த நல்ல காரியத்தையும் துவங்க வேண்டியது இல்லை. எந்நேரமும் ஆரம்பிக்கலாம். ஏனெனில், இந்த மூன்றரை நாட்களில் ஒவ்வொரு வினாடியும் நல்ல நேரமே.

### அக்ஷய திருதியை:

இரண்டாம் யுகமான திரேதா யுகத்தின் முதல் நாள் அக்ஷய திருதியை நாளாகும். முந்தைய யுகத்தின் (சத்ய யுகத்தின்) கெட்ட நேரம் முடிந்து, அடுத்த யுகத்தின் (திரேதா யுகத்தின்) நல்ல நேரம் ஆரம்பிப்பதை இந்த அக்ஷய திருதியை நாள் குறிக்கிறது.

அக்ஷய திருதியை நாளில், பிரம்மா மற்றும் ஸ்ரீ விஷ்ணு தெய்வங்களின் இணைந்த அதிர்வலைகள் பூமியை வந்தடைகின்றன. இது பூமியின் ஆன்மீகத் தூய்மையை (சாத்வீகத்தன்மை) பத்து சதவிகிதம் அளவிற்கு கூட்டுகிறது.

இந்நாளில் ஆன்மீக நன்றியுணர்வோடு, மகழ்ச்சியையும், செழிப்பையும் தொடர்ச்சியாக வழங்கும் தெய்வங்களை நாம் வழிபட்டால், அத்தெய்வங்களின் அருள் நமக்கு குறைவின்றி கிடைக்கும். எனவே தொடர்ந்து இறை அருளை பெற்றிட இந்நாளில் நாம் ஆன்மீக உணர்வோடு கடவுளை வணங்க வேண்டும்.

புனித நீரில் குளித்தல், சடங்குகளுடன் கூடிய ஸ்ரீவிஷ்ணு வழிபாடு, மந்திரம் ஓதுதல், ஹோமம் வளர்த்தல், முன்னோர்களுக்கு படைத்தல் போன்ற சடங்குகள் செய்யும் நாளிது. ஆகமங்கள் இந்நாளில் பித்ருக்களுக்கு அரிசிப் பிண்டம் அல்லது எள்ளை படைத்து சிரார்த்தம் செய்ய வேண்டும் என விதிக்கிறது. சூரியனிடமிருந்து பாதுகாக்கும் பொருட்களான குடை, மிதியடிகள் போன்றவற்றை இந்நாளில் தானமாக தர வேண்டும்.

### வைபவலக்ஷ்மியுடன் கூடிய ஸ்ரீவிஷ்ணுவை வழிபடுதலின் முக்கியத்துவம் :

இந்நாளில் சமுதாயத்தை காக்கும்பொறுப்பிலுள்ள அரசர் அல்லது ஆளுநர், வைபவலக்ஷ்மியுடன் கூடிய ஸ்ரீவிஷ்ணுவைப் பணிந்து சடங்கு முறையோடு வழிபட வேண்டும். இது குடிமக்களின் மகிழ்ச்சிக்கும், வளமைக்கும் வழிவகுக்கும். ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீவிஷ்ணுவின் தெய்வீகச் சக்தியாகும். ஸ்ரீலக்ஷ்மி வழிபாட்டின்பொழுது , ஸ்ரீவிஷ்ணுவையும் வரவழைத்து வணங்காவிடில், ஸ்ரீவிஷ்ணுவின் உள்ளங்கமாக இருக்கும் சக்தி எப்படி வழிபடுமிடத்திற்கு வந்து ஆசிர்வாதம் வழங்கும்? எனவே ஸ்ரீலக்ஷ்மியை எந்த வடிவத்தில் வழிபட்டாலும், முதலில் ஸ்ரீவிஷ்ணுவை அழைக்கவேண்டும். இவ்வாறு செய்வதால், வழிபடுபவர் ஸ்ரீலக்ஷ்மி தத்துவத்தின் முழுப் பலனையும் பெற முடியும்.

### எள் படையல் சடங்கு (எள் தர்ப்பணம்):

அக்ஷய திருதியை நாளில் ஆன்மீகத்தூய்மை (சாத்வீகம்) அதிகரிப்பதால், அன்று, மறைந்த முன்னோர்களினுடைய ஆத்மாக்களால் சராசரியாக 60 முதல் 70 சதவீதம் வரை நல்ல உணர்வுகளையும் 30 முதல் 40 சதவீதம் வரை வேதனை தரக்கூடிய உணர்வுகளையும் அனுபவிக்க வாய்ப்புள்ளது. பக்தியுடனும், ஆன்மீக உணர்வோடும், ஈடுபாட்டுடனும் எள்விதைகளை தர்ப்பணம் செய்வதால், மூதாதையரும், கடவுளும் மகிழ்ச்சியடைகின்றனர. அதனால் அவர்களுக்கான கடன் சுமை சற்று குறைவதோடு, அச்சாதகர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு, அவர்கள் தங்கள் ஆசிர்வாதங்களை அளிப்பார்கள். அவர்களின் சொந்த வாழ்கையில் ஏற்படும் தடங்கல்கள் நீக்கப்படும்.

### தெய்வங்களுக்கு எள் படைத்தல் (எள் தர்ப்பணம்):

வழிமுறை: முதலில் தெய்வத்தை எழுந்தருளச் செய்யவேண்டும். தாமிரத்தால் அல்லது ஆன்மீகத் தூய்மையுள்ள உலோகத்தாலான தட்டை கைகளில் எடுத்துக்கொள்ளவும். பிரம்மாவையும், ஸ்ரீவிஷ்ணுவையும் அல்லது இந்த இருவரின் ஓர்வடிவான தத்தாத்ரேயரை வேண்டி அழைத்து, தட்டில் வரச்செய்யவேண்டும். அவர்கள் சூட்சமமாக தட்டில் வந்துள்ளதாக ஆன்மீக உணர்வு கொள்ளவேண்டும். ஆன்மீக உணர்வோடு தெய்வங்களின் காலடியில் எள்ளை படைக்க வேண்டும்.

**பலன்:** சூட்சமவடிவில் தட்டில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களுக்கு எள்ளைப் அர்ப்பணித்தவுடன், அவை, தெய்வங்களிலிருந்து வெளிப்படும் தூய்மையான (சாத்வீக) அதிர்வலைகளை கிர கித்து கொள்கின்றன. அடுத்து தண்ணீர் அர்ப்பணிக்கும்பொழுது, அர்ப்பணிப்பவரின் ஆன்மீக உணர்வு எழுப்பப்படுகின்றது. இந்த உணர்வின் காரணமாக, எள்ளில் கிரகிக்கப்பட்ட சாத்வீகம் பல மடங்காக அர்ப்பணிப்பவரால் கிரகிக்கபடுகிறது. இதிலிருந்து ஆன்மீக உணர்வை கடவுள் விரும்புகிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

### மூதாதையர்களுக்கு எள் படைத்தல் (எள் தர்ப்பணம்):

முக்கியத்துவம்: இந்நாளில் உயர் நேர்மறை ஆன்மீகத் தளங்களிலிருந்து (லோகங்களிலிருந்து), ஆன்மீக தூய்மைகொண்ட (சாத்வீக) அதிர்வலைகள் பூமிக்கு வருகின்றன. இந்த ஆன்மீக தூய்மையை பெறுவதற்காக, புவர்லோகத்திலிருக்கும் மூதாதையர்களின் ஆத்மாக்கள் பூமிக்கு அருகே வருகிறார்கள். அதில் பெரும்பாலானவர்கள் நமது மூதாதையர்கள். இதன் காரணமாக, இந்நாளில் நமது வேதனைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். நமது மூதாதையர்களுக்கு நாம் நிறைய கடன் (பித்ருகடன்) பட்டுள்ளோம். அந்த கடனை திருப்பிச் செலுத்தவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். எனவே, நாம் இந்நாளில் மூதாதையர்களுக்கு எள் தர்ப்பணம் செய்யவேண்டும் என





அறிவுறுத்தப்படுகிறது. அப்படிச் செய்வ தால், நம் மூதாதையர் அவர்களின் மரணத்திற்குபின் உண்டான வாழ்வில் மேற்கொண்டு பயணிக்க முடியும்.

**வழிமுறை:** வேறு ஒரு தட்டில் நம் முன்னோர்களை எழுந்தருள செய்ய வேண்டும். மூதாதையர்களுக்கு எள்ளைப் படைப்பதற்கு முன்னால், பிரம்மாவையும், ஸ்ரீவிஷ்ணுவையும் வணங்கி, அத்தெய்வங்களின் தத்து வங்களை எள் விதைகள் கிரகிக்க வேண்டிக்கொள்ள வேண் டும். பின் சூட்சம வடிவில் மூதாதையர் எழுந்தருளி யுள்ளார்கள் என்ற ஆன்மீக உணர்வுடன், அவர்கள் காலடியில் எள்ளையும், முனை முறியாத அரிசி (அட்சதை) வைத்து, அதில் நீரைவிட்டு, அது வழிந்து தட்டில் விழும்படி செய்து, மூதாதையர்க்கு படைக்க வேண்டும். நம் மூதாதையர் ஆத் மாக்களை முன்னேற்றி, அவர்களது மரணத்திற்குப் பின் உண்டான வாழ்கையில் பயணிக்க நாம் அவர்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்.



**பலன்:** ஆன்மீகத் தூய்மையை அதிகமாக கிரகிக்க கூடிய திறன் எள்ளுக்கு உண்டு. அவை ஆன்மீக தூய்மையற்ற (ரஜோ, தமோ) பாகங்களை நீக்கவும் செய்யும். எள் தர்ப்பணம் செய்பவரின் ஆன்மீக உணர்வைப் பொருத்து, தட்டில் சூட்சமமாக வந்திருக்கும் மூதாதையரின் சூட்சம உடலைச்சுற்றிப் பரவியிருக்கும் கருமை நீங்கி, ஆன்மீகத் தூய்மை (சாத்வீகம்) அந்த சூட்சம உடலில் அதிகரிக்கும். இதனால் அவர்கள் அடுத்த ஆன்மீக தளத்திற்கு (உலகத்திற்கு) செல்லக்கூடிய சக்தியைப் பெறுகின்றனர். எள்ளை தெய்வத்திற்கு அர்ப்பணிப்பதால் அர்ப்பணம் செய்பவருக்கு ஆன்மீகத் தூய்மை (சாத்வீகம்) ஏற்படுகின்றது. அர்ப்பணம் செய்பவரின் ஆன்மீக உணர்வு 40 சதவிகிதத்திற்கு மேலிருந்தால், கடவுள் அர்ப்பணம் செய்பவரைச் சுற்றி ஒரு நுண்ணிய பாதுகாப்புக் கவசத்தை உருவாக்குகிறார். இத னால் மூதாதையருக்கு தர்ப்பணம் செய்பவருக்கு வேதனைகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது. மூதாதையரிடமிருந்து வரும் மொத்த வேதனைகளில்/ கஷ்டங் களிலிருந்து 5 முதல் 10 சதவீதம் வரை இதனால் குறையும்.

**அக்ஷய திருதியையில் நன் கொடை:** தர்ம நன்கொடைகளை அளிப்பதால்,நாம் நற்பேறு பெறுகி றோம். அக்ஷய திருதி யையில் அளிக்கப்படும் நன் கொடைகள் வீணா வதில்லை. இந்நாளில்தரும் நன்கொடைகளை பெருசிறப்பைக் கூட்டுகின்றன. ஒருவர் முற்பிறவியில் நல்வினை களைச் செய் திருந்தாரேயானால், இந்நாளில் நன்கொடைகள் அளிப்பதால் அவர் பாவங்கள் குறைந்து அவரது நற்பேறு கூடுகிறது. அதன் பலனாக அவர் சுவர்க்க லோகம் செல்ல முடியும். எனினும் சாதகரின் இலக்கு சுவர்க்கம் அல்ல, கடவுளோடு ஒன்றாவதுதான் (மோட்சம்). எனவே சாதகர் கடவுள் காரியத்துகாக தானம் அல்லது சத்பாத்ர (மெய்யான விஷயத்திற்கு) தானம் செய்ய வேண்டும். இங்கு மெய்யானவை என்பது ஆன்மீகத்திற்கு அல்லது நாட்டிற்கு அல்லது நற்காரியங்களுக்கு (தர்மம்) கொடுக்கப்படும் நன்கொடைகளைக் குறிக்கும். இந்த மெய்யான தானத்தால், கொடுப்பவர் எந்த நற்பலனையும் பெறுவதில்லை. அந்த தான செயலானது (கர்மா), பலனை எதிர்பாராமல் செய்கின்ற (அகர்மா) செயலாகிறது. (தான் செயல் செய்கின்றோம் என்ற நினைப்பின்றி செய்வதால், செயலின் பலன்கள் நற்பலனோ, கெட்ட பலனோ, அவரைச் சேராது). அதனால் அவர் ஆன்மீகத்தில் உயர்கிறார். ஆன்மீக முன்னேற்றத்தால், சுவர்க் கத்திற்குச் செல்லாமல், அதற்கும் மேலான உயர்லோகங்களுக்கு சென்றடைகிறார்.

மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ள : 9380949626,
www.hindujagruti.org


மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com







# மற்றவர்களும் பயன்பெற
# அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 9,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

**aanmeegamalar@gmail.com**


**whatsapp: 7299992699**

# இறைவன்தான் ஒரே குரு

பாகம் 8

## மனித வாழ்வு மேம்படுவதற்காக

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்



இந்த உலகமும் உலகப் பொருட்கள் அனைத்தும் தற்காலிகம் மட்டுமே. அனைத்தும் அழியக் கூடியவை. மிஞ்சுவது இறைவன் மட்டும் தான். இறைவன்தான் குரு; குருதான் இறைவன். இறைவனிடத்திலிருந்துதான் அனைத்தும் உருவாகிறது. அப்பொழுது அனைத்திற்கும் தந்தையானவன் இறைவனேயாவான். ஒரு குழந்தை தன் தந்தையிடத்தில் எவ்வளவு அன்பும் விசுவாசமும் வைத்திருக்குமோ அதே போன்று இறைவனின் குழந்தைகளாகின்ற நாம் அனைவரும் இறைவனிடத்தில் அன்பும் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருக்க வேண்டும். அவன் இறைவன் மட்டுமன்றி குருவும் அவரேயாவார். அதற்கு பரமஹம்ஸர் இறைவன்தான் ஒரே குரு என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளார்.

அவர் கூறுகிறார்: “இறைவனை நேசிக்கும் ஒருவர் தான் குருவாக இருப்பதில் ஒருபோதும் இன்பம் கொள்வதில்லை. ‘இறைவன் தான் ஒரே குரு’ என்று அவர் அறிவார். நான் உங்கள் பாதங்களில் ஒரு தூசியாக உணர்கிறேன். இதை நான் உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் காண்கின்ற அந்த மகத்தான ஞானத்தினால் கூறுகிறேன். இப்புவியைவிட்டு நீண்ட காலத்திற்கு முன்பே நான் செல்லவேண்டியிருந்தது. எல்லையற்ற மெய்பொருளிலிருந்து பிரிந்து காணப்படும் இந்த சரீரமானது எனது ஒரு பகுதியாக இனிமேலும் இல்லாமல் இருப்பதற்காக, இந்த தேகத்தை தெய்வீக தீச்சுவாலையில் உருக்கி அழுக்கை எடுக்க நான் விரும்புகிறேன். ஒரு நாள் நான் மறைந்துவிடுவேன். ஆனால் நான் பூமியில் வாழும் காலம் வரை, என்னுடைய மிக உயர்ந்த இன்பமானது, என்றும் என் விருப்பங்களுடன் இசைந்திருந்து என்னை நம்புகிறவர்களுக்கு நான் விரும்பும் ஒரே விஷயமானது, எனக்கு ஆறுதலையும், விடுதலையையும் மற்றும் விவரிக்க முடியாத உத்திரவாதத்தையும் அளித்துள்ள அந்தப் பேரொளியில், அவர்களுக்கு அக்கறை உண்டாகும்படிச் செய்வதுதான், என்பதைத் தெரிவிப்பதாகும். “ஒளிகளுக்கெல்லாம் பேரொளியாகிய அது, இருளுக்கு அப்பாற்பட்டது, எல்லோருடைய உள்ளத்திலும் நிலைத்திருக்கிறது.” (பகவத்கீதை XIII 17) இந்த பிரபஞ்சமும் ஒரு திரைப்படத்தைப்போல் மிதந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் திரைப்படக் கருவி இயங்கும் அறையை திரும்பிப் பார்க்கும் பொழுது, ஒளிக்கற்றைதான் திரையில் படங்களை விழும்படி செய்துகொண்டிருக்கின்றது என்பதைப் பார்க்கிறீர்கள். இந்தப்படைப்பானது இறைவனது ஒளியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு திரைப்படத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்பது நம்பத்தகாததுபோல் காணப்படுகிறது. அதுதான் உண்மை. நான் இந்த அறையைப் பார்க்கிறேன். நான் தூய மெய்பொருள், தூய பேரொளி, தூய பேரானந்தம் ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் காணவில்லை. “அது எங்கும் உலகில் அனைத்தையும் வியாபித்துள்ளது. ’பல பிறவிகளுக்குப் பிறகே யாவும் வாசுதேவ சொரூபம்” என்று ஞானி என்னை வணங்கி வந்தடைகிறான். அத்தகைய மகாத்மா கிடைப்பதற்கரியவன்” என்று இறைவனுடைய இத்தகைய பேரன்பர்களைப் பற்றி கீதை கூறுகிறது.”

### இறைவன்தான் நமது ஒரே உண்மையான குறிக்கோள்

பரமஹம்ஸர் கூறுகிறார் : “ நான் லண்டனிலுள்ள ஸெல்ஃப் ரியலைசேஷன் மாணவர்களிடமிருந்து அவ்வப்பொழுது ஒரு கடிதத்தைப் பெறுகிறேன். இந்த பயங்கரமான விமானத் தாக்குதல்களின்போது, அவர்கள் ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப்பின் ஒரு வழிபாட்டையும் கூட தவறவிடவில்லை. அதுதான் இங்கிலாந்தின் உண்மையான குணம். மேலும் இங்கிலாந்தைக் காப்பாற்றக்கூடியதும் அந்த குணம்தான். அரசியல்வாதிகள் ஒருபோதும் உலகத்தைக் காப்பாற்ற இயலாது. இறைவனை அறிந்துகொள்வது ஒன்றே உலகத்தைக் காப்பாற்றும் இந்த வாழ்க்கையில் அவன்தான் நமது உண்மையான குறிக்கோள். இல்லையெனில் தொடர்ந்து வாழ்வதற்கு எந்த ஊக்கமும் இருக்காது. இறைவனை நேசிப்பவர்கள் அனைத்து மதங்களிலும் அவனை வழிபடவேண்டும். “யார் என்னை எப்படி வழி படுகிறாரோ, அவருக்கு நான் அப்படியே (அவர்களுடைய ஆசை அவர்களுடைய புரிந்துகொள்ளும் தன்மையின் அளவு மற்றும் அவர்களுடைய வழிபாட்டு விதம் ஆகியவற்றிற்கு ஏற்ப) அருள்புரிகிறேன். மக்கள் யாண்டும் என் வழியையே பின்பற்றுகின்றனர்.” என்று கிருஷ்ணன் அருளுகிறார். (பகவத்கீதை IV:11). எவருடைய மதத்தையும் விமர்சிக்காதீர்கள். எல்லா மதங்களிடத்தும் அன்பும், மரியாதையும் கொண்ட ஓர் உண்மையான உணர்வு இருக்கவேண்டும். நீங்கள் ஒரு கோவிலையோ அல்லது தேவாலத்தையோ எங்கு கண்டாலும், அங்குள்ள பரம்பொருளுக்கு மனதிற்குள் நீங்கள் தலை வணங்க வேண்டும். ஓர் ஆசானாக வேண்டும் என அனைவருக்கும் விதிக்கப்படவில்லை. ஆனால் ஆன்மீக விஷயங்கள் மீது மற்றவர்களின் கவனத்தை நீங்கள் ஈர்க்க முடியும். மணிக்கணக்கில் வானொலியை கேட்டவாறும் பயனற்ற நாவல்களைப் படித்தவாறும் உங்களுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். உங்களுடைய சொந்த ஆன்மாவிலிருந்து எழும் தெய்வீகச் செய்திகளால் மகிழ்வுற்று இருங்கள். எனது அன்பின் வெறும் ஒரு மிருதுவான இசைவுற்ற தொடுதலால், இங்கே என் இதயத்தில் அவனது நிகழ்ச்சியை கேட்கின்றேன்.”

“ உங்களுக்கு முக்தியை, நம்பிக்கையின் மூலமாக அல்லாமல், மதக்கோட்பாட்டை பின்பற்றுவதன் மூலமாக அல்லாமல் உங்களுடைய சொந்த அறிவு மற்றும் அனுபவத்தில் வாயிலாக அதை ஈட்டிப் பெற்றாலொழிய எவரும் பெற்றுத்தர முடியாது. நீங்கள் அனுதினமும் உங்களையே கேட்கவேண்டும். இறைவன் ஒருவன் இருக்கிறான் என்றால் நான் ஏன் அவனை பார்க்கக் கூடாது? மகான்கள் இருக்கிறார்கள் எனில் அவர்கள் எங்கே இருக்கின்றனர்.? விடைகள் உங்களுக்குத் தரப்படும்; என்னுடைய ஒரே விருப்பம் என்னவெனில் உங்களுக்கு மெய்பொருளை அளிக்க வேண்டும். அதனால் நான்

அனுபவிப்பதை நீங்களும் அனுபவிக்கவேண்டும் என்பது தான்”.

மேலும் அவர் கூறுகிறார்: “ இந்த வாழ்க்கையின் நோக்கம் உங்களுடைய ஆன்மாவை அறிதல்தான். உங்களுடைய இதயத்தில் இறைவனின் சன்னிதானம் என்னும் பெருங்கடலின் துடிப்பை உணருங்கள். அந்த மகாசக்தியை கண்டறியுங்கள், உங்களுடைய உணர்வுக்குப் பின்னால், அவனுடைய அன்புப்பெருங்கடலை உணருங்கள். நீங்கள் மனிதன் அடையக்கூடிய மாபெரும் வெற்றியை சாதிப்பீர்கள்.

## இறைவனின் குரலுக்கு மட்டும் செவிசாயுங்கள்

அவர் கூறுகிறார்: “உங்களுடைய நல்ல எண்ணங்கள் வாயிலாக இறைவனின் குரலுக்குச் செவிசாயுங்கள். இறைவனும் அவனுடைய தெய்வ குணமுள்ள ஆன்மாக்களும் இந்த நல்ல எண்ணங்களை உண்டாக்குகின்றனர். சாத்தான், தனது சொந்த இயல்புக்கேற்ற எண்ணங்களை உண்டாக்குகிறது. கெட்ட எண்ணம் தோன்றும் ஒவ்வொரு முறையும் அதை அகற்றிவிடுங்கள். அப்போது சாத்தான் உங்களை எதுவும் செய்ய முடியாது. ஆனால், நீங்கள் தவறாக எண்ணிய உடனே, நீங்கள் சாத்தானை நோக்கிச் செல்கிறீர்கள். முடிவாகப் பார்க்கும்போது சாத்தான்கூட இறை வனின் கருவியே. மனிதனுக்கு அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்ற சாத்தான் தவறுகின்றான். இதைத்தொடர்ந்து ஏமாற்றமடைந்த மனிதன் விசுவாசமுள்ள இறைவனை நாடுகின்றான். ஏமாற்றத்திற்காக ஏன் சார்ந்திருக்க வேண்டும். நீங்கள் நல்லவற்றிற்கும் தீயவற்றிற்கும் இடையே ஊசலாடிய வண்ணம் உள்ளீர்கள்; இவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு நீங்கள், சாத்தான் உங்களை அணுகமுடியாத இடத்திற்கு இறைவனின் இதயத்தின் ஆழத்திற்குச் செல்ல வேண்டும்.”

## ஆண்டவனின் அங்கீகாரத்தை நாடுங்கள்

பரமஹம்ஸர் கூறுகிறார்: “இறைவனை வசப்படுத்துவது, பக்தி எனும் ஒரு காணிக் கைதான். அவனுக்கு அளிக்கப்படும் அனைத்து விலையுயர்ந்த பரிசுகளாலும் அவன் மயங்குவதில்லை. ஆனால், இனிய பக்தியெனும் நறுமணம் கமழும் வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் இறைவன் எழுந்தருள்வதற்கு தூண்டப்படுகிறான். உங்கள் இதய ரோஜாவிலிருந்து உங்கள் பக்தியின் நறுமணம் கசியும்பொழுது வல்லமை படைத்த இறைவன் உங்களிடம் வந்தேயாக வேண்டும்.”

மேலே குருதேவர் கூறுவது அனைத்தும் தனக்கு இறைவனால் நமக்காக நேரடியாக அருளியுள்ள போதனைகளாகும். “இந்த வழியை பின்பற்றிச் செல்லுங்கள். வேறு வழிகளில் கண்மூடித்தனமாகச் செல்லாதீர்கள். இது வாழ்வில் பயனளிக்காது” என்று குருதேவர் அருளியுள்ளதை, நேர்மையுடனும் பணிவுடனும் இருப்பவர்கள் செவிமடுப்பர். அவர்கள் எல்லையற்ற மற்றும் முடிவற்ற இறைவனை அடைவதற்காக பயணிப்பர். அப்படிப்பட்டவர்கள் இறைவனின் அருள் விரைவில் கிடைக்கப்பெறுவர். அவர்கள் மனம் எப்பொழுதும் கண்ணாடிபோல் களங்கமற்ற நிலையில் இருக்கும். இந்த உலகமும் உலகப் பொருட்களும் நம் சரீரமும் எல்லாம் அழிவுற்றது என்று மனப்பூர்வமாக நம்புகிறவர்கள் எதையும் மறைக்க மாட்டார்கள். ஆசைகளையும் பொறாமையும் சேர்த்துவைத்து தம் மனங்களை இருளடையச் செய்யமாட்டார்கள். மேலே கூறிய குணங்களுக்கு மாறாக செயல்படுபவர்கள் தமக்குள்ளே இறைவன் வீற்றிருப்பதைத் தெரியாமல் செய்யக் கூடாத அநீதிகள் அனைத்தையும் செய்வர். இதன் விளைவுகள் எதிர்காலத்தில் உண்டு என்பதை நினைக்கமாட்டார்கள். எதை எப்படி மறைத்தாலும் என்றைக்காவது ஒருநாள் பலரும் அறியும்வண்ணம் அவர்களுக்குள் கெட்ட எண்ணங்களாக இருக்கும் அழுக்குகள் வெளிப்படும். தமக்குள்ளே இருக்கும் இறைவனை மறந்து செயல்படுவதும் இறைவனை தம் வாழ்விலிருந்து ஒதுக்கிவைப்பதும், அதாவது இறைவனை அடியோடு மறப்பதும் ’ பாவங்களில் மிகப்பெரிய பாவம்’ என்பதும், அது மிகப்பெரிய அதர்மம் என்பதும் தெரியாமலிருக்கின்றனர், இவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள் ஆவர். இவ்வாறே இவர்கள் பயணித்தால் மீண்டும் மீண்டும் “பிறப்பு இறப்பு” என்னும் மிகப்பெரிய ஆழமான பாதாள சாக்கடையில் மூழ்கிக் கொண்டிருக்கின்றனர் என்பது உறுதியாகிறது.

எனவே, குருதேவர் கூறுவதை முற்றிலும் செவிமடுத்து அதன்படி வாழ்வது சாலச்சிறந்தது. இறைவனை அறிந்தவர்கள் இறைவனை உணர்ந்த மகான்கள் கூறுவது மனிதனின் நன்மைக்காகவே என்பதை மறவாமலிருக்க வேண்டும்.

பரமஹம்ஸரின் தெய்வீகக் காதல் நூல் வெளியீட்டுவிழாவில் திரு.ரஜினிகாந்த் பேசியபோது அவர்கள் இரண்டாவதாக மற்றொரு கருத்தையும் அவர் அளித்துள்ளார். அதன் விபரமாவது: “இந்த உடம்பு எப்பேர்பட்ட ஒரு மெக்கானிசம். இந்த உடம்புக்குள் எவ்வளவு டெக்னிக் விஷயங்கள் இருக்கிறது! அவ்வளவு இருக்கும்போது, அதற்கு







ஒரு கரண்ட், ஒரு பாட்டரி ஆகியவை வேண்டும் அல்லவா. அது எங்கிருந்து வருகிறது என்றால் அது நீஷீஉனீஷீஉ (தெய்வீகம்)லிருந்து வருகிறது. அதை ரிசீவ் செய்வது எது? அதற்கு நம் உடம்புக்குள் ஏதோ இருக்க வேண்டும். அது எங்கே இருக்கிறது? அது தான் நம் உடம்பிலுள்ள சக்கரங்கள் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், ஆனாஹதம், விசுத்தா, ஆக்ஜா, சஹஸ்ராரம், குடஸ்தா இவையெல்லாம் பவர் சென்டர்கள். அதை எங்கே ஜீறீணீநீமீ பண்ணியிருக்கிறது என்றால் அது நம் முதுகெலும்பில். உங்களுக்குத் தெரியும்; அவை: மண்ணு, நீர், அக்னி, வாயு, ஆகாயம். இவை செயல்படவேண்டுமென்றால், பாட்டரி சார்ஜ் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அந்த காஸ்மிக் பவர்ஜ இவை இழுக்கும். அதுதான் ‘கிரியா யோகம்’. அது சாதாரண ஆர்ட் இல்லை. அதைத் தெரிந்துகொண்டால், நாம் அனைவரும் கஷ்டப்படுவது சந்தோஷத்திற்கும் மன நிம்மதிக்கும் தானே. அது நமக்கு கிடைக்கப்பெற வேண்டும். அதற்கு முன்னர் இன்னொரு விஷயம் இருக்கிறது. பூமியில் ஏதாவது விதை போட வேண்டும் என்று எண்ணினால் முதலில் பூமியை பதப்படுத்த வேண்டும். பின்னர் தன்னீர் பாய்ச்சி, களையெல்லாம் எடுத்து, உரம் போட்டு அதன் பின்னர்தான் விதை போட வேண்டும். இந்த கிரியா உடனே பலன் தராது. அது மட்டுமின்றி இன்னொரு உதாரணம் என்னவென்றால் ஒரு விருந்தாளியை வீட்டிற்கு கூப்பிட்டாலே நீங்கள் முதலில் என்ன செய்வீர்கள்? வீட்டை அப்படியே வைத்திருப்பீர்களா? வீட்டை எவ்வளவோ சுத்தப்படுத்தி எல்லாம் சரியாக செட் செய்து வைத்துக்கொள்வோம். அது ஒரு விருந்தாளி வீட்டிற்கு வருவதற்கு முன்னர் செய்வது. விருந்தாளிக்கே இப்படியென்றால், அப்பேர்பட்ட கடவுள் விருந்தாளியாக உங்கள் நெஞ்சுக்குள்ளே வரவேண்டுமென்றால் உங்கள் நெஞ்சை எவ்வளவு தூய்மையாக வைத்திருக்க வேண்டும்! அவ்வளவு தூய்மையாக வைத்துக்கொண்டால்தான் பலன் கிடைக்கும். அப்படி செய்தால்தான் கிரியா வொர்க்கவுட் ஆகும். அதாவது கிரியா வேலை செய்யும் எனப்பொருளாகும். அப்பொழுதுதான் ஆண்டவன் வருவான். இல்லையென்றால் அது சாத்தியமில்லை.

அது எப்படியென்றால். “ஒருமுறை திருதராஷ்ட்ரர் கிருஷ்ணனிடம் கூறினார், “கிருஷ்ணா, நீ அர்ஜுனனுக்கே எல்லா உபதேசமும் செய்து கொண்டிருக்கிறாய்; துரியோதனனுக்கும் அவன் என் மகன் உபதேசம் செய்வாய்” என்று கூறினார். அதைக் கேட்ட கிருஷ்ணன், “சரி, நான் உபதேசம் செய்கிறேன்” என்று கூறிவிட்டு துரியோதனனிடம் சென்றார். தனக்கு உபதேசம் செய்வதற்காகத்தான் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்ட துரியோதனன், “ இதோ பார் கிருஷ்ணா, எது நல்லது என்றும் எது கெட்டது என்றும் எனக்குத் தெரியும்; எது தர்மம் என்றும் எது அதர்மம் என்றும் தெரியும்; எது செய்தால் புண்ணியம் என்றும் எது செய்தால் பாவம் என்றும் தெரியும். ஆனால் செய்யமுடியவில்லை; நான் செய்யமாட்டேன். அங்கே அர்ஜுனன் என்ற ஒருவன் இருக்கிறான். அவனுக்கு நல்லதும் தெரியாது; கெட்டதும் தெரியாது; எது செய்யவேண்டும் என்பதும் தெரியாது; எது செய்யக்கூடாது என்பதும் தெரியாது. இந்த உபதேசத்தையெல்லாம் அவனிடத்தில் சென்று சொல்” என்று துரியோதனன் கிருஷ்ணனிடம் கூறினான். அர்ஜுனன் உண்மையிலேயே தன்னை இறைவனிடத்தில் அர்ப்பணித்துவிட்டான். அவனுடைய ஆத்மாவும் பரிசுத்தமானது. அதனால்தான் கிருஷ்ணன் பகவத்கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தார். ஒரு விதத்தில் நாம் எல்லோரும் துரியோதனர்கள்தான். எது நல்லது, எது கெட்டது என்றும் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்றும் நமக்குத் தெரியும்; ஆனால் நாம் செய்யமாட்டோம். பொய் சொல்லக்கூடாது என்று தெரியும்; ஆனால் பொய் சொல்வோம்; ஒருவனை மோசம் செய்யக்கூடாது என்று தெரியும்; ஆனால் மோசம் செய்வோம்; ஆசைப்படக்கூடாது என்று தெரியும்; ஆனால் ஆசைப்படுவோம். எனவே நாமெல்லாம் துரியோதனர்களாக இல்லாமல் அர்ஜுனர்களாக மாறினால் நம்மை இறைவனிடத்தில் எடுத்துச் செல்லலாம்”.

கிருஷ்ணனுடைய உபதேசத்தைக் கேட்காததால் துரியோதனனும் அவன் கூட்டத்திலுள்ளவர்களும் அழிந்துவிட்டனர். கிருஷ்ணனுடைய உபதேசத்தைக் கேட்ட பாண்டவர்கள் இறைவனிடத்தில் ஐக்கியமாகிவிட்டனர். திரு.ரஜினிகாந்த் அவர்கள் கூறிய இந்தக் கருத்து தற்போதைய மனிதர்களுக்கு உகந்த கருத்தாக அமைந்துள்ளது. தற்போதைய மனிதர்கள் மகான்களுடைய உபதேசத்தை பின்பற்றாமல் நடந்து கொள்கின்றனர். மனிதன் செய்கின்றதவறுகளைமன்னித்துவிடுவார்இறைவன். ஆனால் அவரவர்களின் மனங்களிலிருக்கும் அழுக்குகளை அவரவர்களேதான் கழுவ வேண்டும். தியானத்தால் ஏற்படும் இறை ஞானநெருப்பினால் மட்டும்தான் அழுக்குகளை கழுவமுடியும். அதற்கு அவரவர்கள் முயற்சித்தால் மட்டும்தான் தம்மை மாற்றிக்கொள்ளவே முடியும்.

மீண்டும் மலரும்

குருப்ரியா Cell No.9894595909





www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# பிராண சக்தி

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com



படைப்பின் ஒட்டு மொத்த இயக்கமும் பிராண சக்தியை சார்ந்து இருக்கிறது. சொல்லப் போனால் படைப்பில் இருக்கும் சக்தியே பிராணமாகத் தான் இருக்கிறது. அண்டத்தில், பிராணம் பல்வேறு பரிமாணங்களில், பல்வேறு அதிர்வுகளில், பல்வேறு நிறங்களில், பல்வேறு வடிவங்களில் இருக்கிறது. பிராண சக்தி என்பது மனிதன் உயிர், உடல் இயங்கத்திற்க்கு ஆதாரம். மனித உடலில் பிராணம் ஐந்து பூதங்களாகவும், உணர்வுகளாகவும் படைக்கப்பட்டுள்ளது.

ஒருவரின் தனிப்பட்ட பிராண அதிர்வைப் பொறுத்துத்தான் நிறம், குணம், வடிவம், மன மற்றும் உடல் நிலை இருக்கும். உடலில் பிராண பற்றாக்குறை ஏற்படுமானால், அது நோயாக பிரதிபலிக்கிறது. உடலிர்க்கு தேவையான பிராணம் இயற்கையின் பல ஆதாரங்களில் இருந்து இருந்து பெறப்படுகிறது. அதில் ஒரு முக்கியமான ஆதாரம் நாம் உண்ணும் உணவு.

ஒவ்வொரு உணவும் ஒவ்வொரு விதமான பிராண சக்தியைக் கொண்டிருக்கும். இந்த பிராண சக்தி உடலின் ஒவ்வொரு விதமான இயக்கத்திற்கு தேவைப் படுகிறது. அதிகமாக உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு, உடல் மிகவும் பலமாக இருக்க கனமான ஆற்றல் கொண்ட இறைச்சி, காரம் அதிகமான, வறுத்த உணவுகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகமாக மூளைக்கு வேலைக் கொடுக்கும் நபர்கள் தங்கள் உணவில் கனமான உணவுகளைத் தவிர்த்து மென்மையான உணவுகளை உட்கொள்வது ஆரோக்கியம். கனமான உணவுகள் உடலின் வலிமைக்கு உதவும். ஆனால் கனமான உணவுகள் மனதை சோர்வடைய செய்யும், மந்த நிலையையும் ஏற்படுத்தும். மென்மையான உணவுகள் பழங்கள், குறைவான காரம், தானிய வகைகள் மற்றும் நீர் ஆகாரங்கள். நீர் ஆகாரங்கள் உடலையும் மனதையும் தூய்மையாக வைத்துக் கொள்ள ஏற்ற உணவு, அது மட்டும் அல்லாமல் அது மூளையின் செயல் திறனை நீண்ட நேரம் தக்க வைக்கும். மிகவும் கட்டுப்பாடான விரதங்களில் இருப்பவர்கள், உணவின் சுவையுடன் தங்களை ஒட்டிக் கொள்ளாமல் உணவை உடலின் தேவையாக மட்டும் ஏற்றுக் கொள்வார்கள். ஞானத்தை அடைய விருப்பம் இருப்பின், உணவை அள வாக எடுத்துக் கொள்ளுங்கள். வளரும் குழந்தைகளுக்கு அவர்கள் வளர்ச்சிக்கு தக்க உணவு வேண்டும், இருப்பினும் உணவுப் பழக்க வழக்கங்களில் சில கட்டுப்பாடுகளை கடைப் பிடிப்பது நல்லது.





கருவுற்ற பெண்களுக்கு பழங்கள் மிகவும் அவசியம். இது மூளையின் செயல்திறனை நன்றாக வைத்திருக்கும். அதோடு உடலில் நீர் ஆகாரம் உடலை சுத்திகரிக்கும். தாயின் கருவில் இருக் கும் குழந்தைக்கு பிராணம், தாய் உண்ணும் உணவில் இருந்தே பரி மாற்றப்படுகிறது. தாய் உண்ணும் உணவைப் பொறுத்து குழந்தையும் குணம் மாறும்.

ஐந்து பூதங்கள் (நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு) பிராணத்தைக் கொண்டுள்ளது. இந்த ஐந்தில் இருந்து வாதம், பித்தம், கபம் என்று மூன்று தோஷங்கள் வெளிப்படுகிறது. உடம்பில் இந்த மூன்றும் சம நிலையில் இருக்கும் பச்சத்தில் உடல் ஆரோக்கியமாக இருக்கும். இந்த மூன்றிலும் ஏற்படும் சமசீர் அற்ற தன்மை, நோய்களை ஏற்படுத்தும். வயதானவர்களுக்கு பெரும்பாலும் வாத (வாயு) கோளாறு ஏற்படும். வாத கோளாறு இருப்பவர்கள் வாயு சம்பந்தப் பட்ட உணவுகள் தவிர்த்து காய்கறி பழங்கள் எடுத்துக்கொள்வது சிறந்தது.



பிராணம் பல பரிமாணங்களில் இருக்கிறது. அதில் முக்கியமானது நிறம். ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு விதமான தாக்கத்தை உடலில் ஏற்படுத்தும்.

உ த ர ண மா க சிவப்பு நிறம் வலிமையைக் கொடுக்கும். சிவப்பு நிற உணவுகள் என்றால், இறைச்சி, மாதுளம், காரட். போன்றவை.

பச்சை நிறத்தைப் பொறுத்தவரை அது சுத்தி செய்யும் தன்மை உடையது. வேம்பு, பாகற்காய் போன்றவை.

மஞ்சள் நிறம் என்றால், குணப்படுத்தும் தன்மைக் கொண்டது. மஞ்சளையே எடுத்துக் கொள்ளுங்கள். அது மிக சிறந்த கிருமி நாசினி. ஒரு நிறம் என்று பார்த்தல் கூட அதிலும் பல வடிவங்கள் உள்ளது.

மிக அடர்த்தியான சிகப்பு அதிக வலிமை தரும் பிராணத்தைக் கொண்டு இருக்கும். சிகப்பு நிற இறைச்சிகள். அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதானமான உடல் அமைப்புடனும், உழைப்பைப் பொறுத்து ஒவ்வொரு விதமான பிராண தேவை உடனும் இருப்பார்கள். எனவே உணவுகளை மிக ஆராய்ந்து தேர்வு செய்து உண்ணுவது ஆரோக்கியம்.

குரு சிஷ்ய பரம்பரை வழியாக யோகா நெறியை கற்றுக் கொள்ள அணுகவும். இந்தியாவில் பல பாகங்களில் தியான் அஷிரமத்தால் யோகா கற்றக் கொடுக்கப்படுகிறது. எந்த கட்டணமும் கிடையாது.

யோகி அஷ்வினி
(தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டது).
கருத்துக்கள் மற்றும் விவரங்களுக்கு அணுகவும்:
9841430369,
Dhyan Foundation, சென்னை.

# துர்சக்திகள், நோய், பயம் போக்கும் கலியுக கடவுள்

# சரபேஸ்வரர்

இரணியன் என்ற அசுரர் குல தலைவன் பரமனை நோக்கி சாகா வரம் வேண்டி தவம் செய்தான். கடும் தவத்தின் பயனாக பரமனிடம் இருந்து, “தேவர், மனிதர், விலங்குகள் முதலிய யாவராலும், பகலிலோ அல்லது இரவிலோ, வீட்டின் உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்திலோ, எவ்வித ஆயுதங்களாலோ தமக்கு மரணம் ஏற்படக் கூடாது” என்ற அரிய வரத்தினை பெற்றான்.

தன்னை எதிர்ப்பார் யாரும் இன்றி தானே கடவுள் எனக் கூறிக் கொண்டு, தன்னையே கடவுளாக வணங்க வேண்டும், மற்ற யாரையும் தெய்வமாக தொழக்கூடாதெனக் கூறி கொடுமையான ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு பிறந்த மகன் பிரக லாதன். தன் தாயின் வயிற்றில் இருக்கும் வேளையி லேயே நாரத முனிவர் மூலம் திருமால் உபன்யாசம் கேட்டு சிறந்ததொரு பரந்தாமன் பக்தனாய் பிறந்தான்.

எந்நேரமும் நாராயணன் நாமம் சொல்லி வளர்ந் தான். இதனை கண்ட இரணியன் கடும் கோபம் கொண்டான்.

எவ்வளவு சொல்லியும் தன் நாமம் சொல்லாத பிரகலாதனை, தன் மகன் என்றும் பாராமல் பல வழிகளில் அழித்திட முயன் றான். பரந்தாமனின் அருளால் அனைத்திலிருந்தும் தப்பிய பிரகலாதனை நோக்கி “எங்கெ உன் நாராயணன்’’ எனக் கேட்க,

பிரகலாதணோ “என் நாராயணன் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார்’’ என்று கூறினான்.

கோபம் கொண்ட இரணியன் அருகில் இருந்த தூணை தன் கதை கொண்டு தாக்க, அதிலிருந்து நரசிம்ம உரு கொண்டு வெளிப்பட்டார் பரந்தாமன். இரணியனது வரத்தின் படியே, மனிதனாகவோ, தேவராகவோ, விலங்காகவோ இல்லாது அனைத்தும் கலந்த கலவையாய் நரசிம்மமாய்வந்து,



இரவோ பகலொ இல்லாத அந்தி நேரத்தி, எவ்வித ஆயுதங்களுமின்றி தன் நகத்தினை கொண்டு, வீட்டின் உள்ளும் இல்லாது வெளியும் இல்லாது வாசற்படியில் வைத்து இரணியனை வதம் செய்தார்.

அசுரனின் குருதி குடித்ததால் மதி மயங்கி ஆக்ரோஷமானார். நரசிம்மத்தின் கோபம் தணிக்க வேண்டி தேவர்கள் அனைவரும் பரமனை நாட, பரமன் சரபேசப் பறவை உரு கொண்டு வந்து நரசிம் மத்தின் கோபம் தணித்தார். இவ்வாறு பிரகலாதன் மற்றும் தேவர்களது நடுக்கத்தினை தீர்த்ததால் இவர் நடுக்கந்தீர்த்த பெருமான் என்றானார்.

இந்த சரபேசரின் தோற்றம் மிகவும் விசித்திர மானது. மனிதன், பறவை, மிருகம் மூன்றும் சேர்ந்த கலவை தான் சரபேஸ்வரர். தங்க நிறப் பறவையின் உடலும், மேலே தூக்கிய 2 இறக்கைகளும், 4 கால்கள் மேலே தூக் கிய நிலையிலும், 4 கால்கள் கீழேயும், மேலே தூக்கிய ஒரு வாலும், தெய்வீகத் தன்மை கொண்ட மனிதத் தலையும், அதில் சிங்க முகமும் கொண்ட ஒரு விசித்திரப் பிறவியாக உருமாறினார்.

இந்த அபூர்வப் பிறவி தோன்றியதும் போட்ட சப்தத்தில் நரசிம்மர் அடங்கியதாய்ச் சொல்வார்கள். சந்திரன், சூரியன், அக்னி ஆகியவை மூன்று கண்களாகவும், கூர்மையான நகங்களோடும், நாலு புறமும் சுழலும் நாக்கோடும், காளி, துர்க்கா ஆகியோரைத் தன் இறக்கைகளாகவும் கொண்டு வேகமாய்ப் பறந்து, பகைவர்களை அழிக்கும் இந்த சரபேஸ்வரரைப் “பட்சிகளின் அரசன்’’ என்றும் “சாலுவேஸ்வரன்’’ என்ற திருநாமத்துடனும் குறிப் பிடுகின்றனர்.

இவரின் சக்திகளாய் விளங்குபவர்கள் ப்ரத்யங் கிரா, மற்றும் சூலினி. இதில் தேவி பிரத்யங்கிரா சரபேஸ்வரரின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றி யதாகவும், இவள் உதவியுடன் தான் நரசிம்மரின் உக்கிரத்தை அடக்கியதாகவும் சில குறிப்புக்கள் கூறுகின்றன.

காஞ்சி புராணத்தில் நரசிம்மரின் உக்கிரத்தை அடக்கப் பரமசிவன் வீரபத்திரரை அனுப்பியதாகவும், நரசிம்மம் ஆனது வீரபத்திரரைக் கட்டிப் போட்டு விட்டு வேடிக்கை பார்த்ததாகவும், அந்தச் சமயம் சிவன் ஒரு ஜோதி ரூபமாக வீரபத்திரர் உடலில் புகுந்ததாகவும், உடனே சரபேஸ்வரராக வீரபத்திரர் உருமாறி நரசிம்மத்தை அடக்கியதாகவும் கூறுகிறது.

லிங்க புராணக் குறிப்புக்களும் இவ்விதமே குறிப்பிடுகிறது. எப்படி இருந்தாலும் சரபேஸ்வரரின் சக்தி அளவிட முடியாதது. சத்ருக்களால் ஏற்படக் கூடிய பில்லி, சூன்யம், ஏவல் போன்றவற்றுக்கு மட்டு மில்லாமல் இவரைத் தரிசித்து முழு நம்பிக்கையுடன் பிரார்த்தித்து வந்தால் எல்லாவிதமான நோய்களையும் தீர்த்து வைப்பார் என்றும் கூறுகிறார்கள்.

இவரைக் “கலியுக வரதன்’’ என்றும் குறிப்பிடுகிறார்கள். “நரசிம்ம கர்வ பஞ் சக மூர்த்தி’’ என்றும் குறிப்பிடுகின்றனர். தற்சமயம் காணப்படும் சரபர் மூர்த்தங்கள் யாவும் பிற்காலச் சோழர் காலத்தில் வந்தவை எனவும் சொல்கின்றனர். பழைய தஞ்சை மாவட்டத்தில் இருந்த தாராசுரம், திருபுவனம் போன்ற ஊர்களில் உள்ள கோவில்களில் சரபேஸ்வரரின் சிற்பங்கள் காணப்படுகிறது. இதில் திருபுவனம் கோவிலில் தனி சன்னதி இருக்கிறது. இது தவிர சிதம்பரம் கோவிலில் நாம் பார்த்ததும் தனிச் சன்னதி தான்.

ஞாயிற்றுக் கிழமைகளில் இவரை வணங்குவது சிறப்பாகச் சொல்லப்படுகிறது

**சரபேஸ்வரர் ஆலயங்கள் தோன்றியவிதம்:**

சோழர்கள் ஆட்சி காலத்தில் தான் சரபேஸ்வரர் வழிபாடு அறிமுகமாகியது. சரப மூர்த்தி வடிவத்தினைக் கோயில்களில் அமைப்பதாலும் வழிபடுவதாலும் எதிரிகள் அழிக்கப்படுவார்கள். போர்களில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே சோழர்கள் சரபேஸ்வரர் வழிபாட்டினைத் துவங்கினார்கள்.

**துக்காச்சி:** தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள துக்காச்சி என்ற ஊரிலுள்ள ஆபத் சகாயேசுவரர் கோயிலில் தான் முதன்முதலில் சரபமூர்த்தியின் சிற்பம் அமைக்கப்பட்டது. விக்கிரம சோழன் (கி.பி.11181135) காலத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த கோயிலில் அமைக்கப்பட்ட சரபேஸ்வரர் சிலைதான் தற்போதுள்ள சரபேஸ்வரரின் வடிவங்களில் மிகப் பழமையானதாகும்.

**தாராசுரம்:** தஞ்சை மாவட்டம், தாராசுரத்திலுள்ள ஐராவதேசுவரர் ஆலயத்தில் உள்ள சரபேஸ்வரர் வடிவம் தமிழகத்தின் இரண்டாவது சிறப்பாகும். இரண்டாம் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட இக்கோயிலின் ராஜ கம் பீர மண்டபத்தின் மேற்குப்பக்கச் சுவரில் சரபேஸ்வரரின் அழகிய சிற்பம் உள்ளது. இந்தச் சிற்பத்தில் சிங்கத்தின் முகத்தினையும், கிரீடம் அமைந்த தலையும், விரிந்த இறகுகளையும் கொண்டு விளங்கும் சரப மூர்த்தியின் காலுக்கடியில் கூப்பிய கரங்களுடன் நரசிம்மர் காணப்படுகின்றார்.

**மாடம்பாக்கம்:** சென்னை, தாம்பரத்திலிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள மாடம்பாக்கம், தேனுபூரீஸ்வரர் ஆலயம், இதே மூன்றாம் குலோத்துங்க சோழனால் நிர்மானிக்கப்பட்டதாகும்.நான்கு வேதங்களும் வந்து வணங்கியதால் இத்தலத்திற்கு சதுர்வேதமங்களம் என்ற பெயரும், காமதேனு வழிபட்டதால் காமதேனுபுரி என்ற பெயர்களும் உண்டு. இக்கோயிலுள்ள சரபேஸ்வரர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்று கூறப்படுகின்றது. இவரை வழிபடின் மனதால் எண்ணிய காரியங்கள் யாவும் விக்கினமின்றி உடனே நிறைவேறும் என்றும் கூறப்படுகிறது. இந்த சரபேஸ்வரரின் சக்திகளாக பிரத்தியங்கரா தேவியும், சூலினியும் விளங்குகின்றனர். இந்த இருவரையும் சரபேஸ்வரரின் மனைவியர் என்று அழைக்கின்றனர். சரபரின் இரு இறக்கைகளாக விளங்கும் இவர்கள் சக்தியின் திருஅவதாரம் என்றும் கூறப்படுகின்றது. இம்மூவருக்கும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4.30 6.00க்கு நடைபெறும் ராகுகால பூஜை மிகவும் சிறப்புடையது. இதுமட்டுமேயல்லாது பிரதோஷ கால பூசையும் இங்கு சிறப்பாக வழிபடப்படுகின்றது.தொடர்ந்து ஆறு வாரங்கள் சரபேஸ்வரர் பூசையில் கலந்து கொண்டு தரிசித்தால் அவரவர் மனதில் நினைத்த காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறுகின்றன என அனுபவப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

**திரிசூலம்:** சென்னையை அடுத்த திரிசூலம் என்னுமிடத்தில் அபூர்வமான கலையம்சம் நிறைந்த விக்கிரஹத்துடன் அமைந்துள்ளது இக்கோவில். ஆலய மூலவருக்கு ஸ்தம்ப சரபேஸ்வரர் என்று பெயர். இவர் நின்ற நிலையில் நான்கு கைகளும், இரு முகமும் உடையவராக விளங்குகிறார். இரு கைகளில் மான், மழுவினை ஏந்தியிருப்பதுடன், இரு கைகளால் நரசிம்மரை மடியில் கிடத்தி பிடித்துக்கொண்டிருப்பது போல் அமைந்துள்ளது சிறப்புமிக்க ஒன்றாகும்.

**மயிலாப்பூர்:** ஸ்ரீ சரபேஸ்வரர் உருவம் ஆலயத்தின் தூணில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் பங்குனித் திருவிழாவில் சோமாஸ்கந்தமூர்த்திக்கு ஒரு வாகனமாயும் அமைக்கப்பட்டுள்ளன. திருமயிலை தெற்கு மாட வீதியில் இருக்கும் ஸ்ரீ வெள்ளீஸ்வரர் ஆலயத்திலும் ஸ்ரீ சரபேஸ்வரர் வழிபாடு சிறப்பாக நடந்து கொண்டு வருகிறது.

**கோயம்பேடு:** சென்னையிலுள்ள கோயம்பேடு குசலபுரீஸ்வரர் என்ற குறுங்காலீஸ்வரர் கோயில் மண்டபத் தூணில் காணப்படும் சரபேஸ்வரரின் வடிவம் மிக அற்புதமானது. உக்கிரம் தீர்ந்த சாந்த சொரூபியான நரசிம்மத்தை அன்புடன் வாரி அனைத்துக் கொள்ளும்படியான அபூர்வ தரிசனம் தருகிறார்

திருவாரூர் கோயிலின் மேலைக் கோபுரம், வைத்தீஸ்வரன் கோயில் கிழக்குக் கோபுரம், மதுரை மீனாட்சி ஆலய தெற்குக்கோபுரம், சிதம்பரம் நடராஜர் ஆலயக் கோபுரம் இங்கெல்லாம் சரபேஸ்வரர் சுதை வடிவங்களில் காணப்படுகின்றார். இத்தகைய ஆலயங்களில் காணப்படும் சரப மூர்த்தியை வழிபட்டால் தீவினை மறைந்து நன்மைகள் பல உண்டாகும் என்று கூறப்படுகிறது.






வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**



தொடர்பு கொள்ளவும்:

**ஆசிரியர்: நாகராஜன்**

16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598





# சகஸ்ரலிங்கம்

ஒரே ஒரு சிவலிங்கத்தின் முன்பாக சிவாய நம என்றோ அல்லது ஓம் நமச்சிவாய என்றோ ஜபித்தால் ஒருமுறை ஜபித்த பலன் தான் கிட்டும்;

கருங்கல்லால் கட்டப்பட்ட பழமையான சிவா லயத்தினுள் சாதாரண நாளில் ஒருமுறை சிவாயநம/ சிவாயசிவ/சிவசிவ/ஓம்சிவசிவஓம்/நமசிவாயநம என்று ஜபித்தால் 1000 முறை ஜபித்த பலன் கிட்டும்;

அமாவாசை அல்லது பிரதோஷம் அல்லது திருவாதிரை அல்லது கிரகண நாளில் கிரகண நேரத்தில் ஜபித்தால் எத்தனை முறை ஜபிக் கின்றோமோ அத்தனை முறை பெருக்கல் 100 கோடி மடங்கு ஜபித்த பலன் கிட்டும்;

அதுவே, ஒரே ஒரு சகஸ்ரலிங்கத்தின் முன்பாக ஒரே ஒருமுறை சிவாய நம என்று ஜபித்தால் 1000 முறை ஜபித்த பலன் கிட்டும்;

அந்த சகஸ்ரலிங்கத்திற்கு ஒருமுறை பால் அபிஷேகம் அல்லது ருத்ராட்ச அபிஷேகம் அல்லது விபூதி அபிஷேகம் அல்லது கரும்புச்சாறு அபிஷேகம் செய்தால் 1000 சிவலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்த புண்ணியம் கிட்டும்;

தமிழ்நாட்டிலும் மற்றும் பாரத தேசம் முழுவதும் பல ஊர்களில் பழமையான சிவாலயங்களில் சகஸ்ர லிங்கங்கள் இருக்கின்றன;

இந்த ஆலயங்களின் பட்டியல் மிகப் பெரியது; தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு ஒரு சகஸ்ரலிங்கம் சராசரியாக இருக்கின்றது;

ஜோதிடப்படி, மேஷராசியில் முதல் நட்சத்திர மான அசுபதியை செவ்வாய் ஒன்றரை ஆண்டு களுக்கு ஒருமுறை கடக்கும்; அப்போது வரும் செவ்வாய்க்கிழமை அன்று குரு ஓரையில் சகஸ்ர லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யத் துவங்கி அதற்கு அடுத்த ஓரையான செவ்வாய் ஓரை முடியும் போது அபிஷேகத்தை நிறைவு செய்ய வேண்டும்;

அபிஷேகம் செய்ய இயலாதவர்கள் சிவன் 108 போற்றி அல்லது 1008 போற்றி அல்லது ஒருமணி நேரம் ஏதாவது ஒரு சிவ மந்திரம் ஜபிக்கலாம்;

## சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் முறை

சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வது போலவே அபிஷேகம் செய்ய வேண்டும்; பசுவின் பாலைக் கறந்து அதன் சூடு ஆறும் முன்பாக அபிஷேகம் செய்வதால் விஷேசமான பலன் கிட்டும்;நிறைவாக 108 ஐந்து முகருத்ராட்சங்களால் அல்லது 1008 ஐந்து முக ருத்ராட்சங்களால் அபிஷேகம் செய்யலாம்;

சகஸ்ரலிங்கம் இருக்கும் மண்டபத்தில் இருக்கும் ஒவ்வொரு தூணிற்கும் செவ் வரளி மாலையும், சகஸ்ரலிங்கத்திற்கு ஒரு செவ்வரளி மாலையும் அணிவிக்க வேண்டும்; செவ்வரளி மாலையால் சகஸ்ர அர்ச்சனை செய்யவேண்டும்;படையலாக தக்காளிச்சாதம் இட வேண்டும்;

அபிஷேகம்,ஆராதனை நிறைவானப் பின்னர், படையலை அங்கே குழுமியிருக்கும் அனைவருக்கும் பகிர்ந்து தரவேண்டும்; இந்த அபிஷேகம் செய்பவர்களும் சாப்பி டலாம்;

பல ஆலயங்களில் 1970 வரையிலும் சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேகம் செய் வதற்கு என்றே பசுக்களும்,மிகச் சில இடங்களில் காரம்பசுக்களும் வளர்த்துள் ளார்கள்; மீண்டும் இதை செயல்படுத்துவது நன்று;

சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேகம் செய் யும் போது நமக்கு உபதேசிக்கப்பட்ட சிவ மந்திரங்களை ஜபிக்கலாம்; அது 1000 மடங்காகப் பெருகி நமக்கு வழிகாட்டும்;

அபிஷேகம் செய்ய இயலாதவர்கள் சகஸ்ரலிங்கத்திற்கு அர்ச்சனை செய்வ தற்காக 12 நாகலிங்கப் பூக்களை தான மாகத் தரலாம்;


சகஸ்ரலிங்கத்திற்கு இவ்வாறு அபிஷேகம் செய்ய ஏற்ற நாட்கள்:

செவ்வாயும் திருவாதிரையும் இணைந்து அசுபதி நட்சத்திரத்தை செவ்வாய்க்கிரகம் கடக்கும் நாள்

25.1.2019 ஆம் தேதியன்றுதான் மீண்டும் செவ்வாய்க்கிரகம் அசுபதி நட்சத்திரத்திற்கு வர இருக்கின்றார் என்பதை மறக்காதீர்கள்;

## சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதால் உண்டாகும் பலன்கள்

1. தீராத நோய்கள் எதுவாக இருந்தாலும் தீர்ந்துவிடும்;
2. ரத்த சோகை,தோல் நோய்கள் எளி தில் குணமாகும்;
3. கண் நோய், கண்களில் வரும் கான்சர், கண் பார்வை மங்குதல், கண் கட்டிகள், கண் பார்வைக் குறைவு போன்றவைகள் குண மாகும்;
4. எப்போதும் வறுமைக்கோட்டிற்கு கீழேயே வாழ்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய மாற்றத்தைக் காண்பார்கள்;
5. இன்றைய நவீன கருவிகள் கண்டுபிடிக்கும் முயற்சியில் இருப்பவர்கள் இதைச் செயல் படுத்தினால், அவர்களது கண்டு பிடிப்புகள் மகத்தான வெற்றிகளை அடையும்;




ஆன்மிகமலர் மெயில் புக்

## பெருமாள் கோவில்களில்
# மூன்று முறை தீர்த்தம் தருவது ஏன்?



முதல் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது ப்ரதமம் கார்ய சித்யார்த்தம் என்றபடி நம் செயல்களில் வெற்றி பெற (ஜ்ஞானத்தை வேண்டி) ஸங்கல்பம் செய்துகொள்வது.


இரண்டாம் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது த்விதீயம் தர்மஸ்தாபனம் என்றபடி, நாம் நெறியைக் கடைப்பிடிக்க ஸங்கல்பம் செய்துகொள்வது.

மூன்றாம் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது த்ரிதீயம் மோக்ஷ ப்ரோக்தம் குணார்னவம் என்றபடி, மெய்ப்பொருளான பகவானை உணர ஸங்கல்பம் செய்து கொள்ளும் மோக்ஷ உபாயம்.

– ஸ்ரீதேசிக தர்சனம் இதழ்

# ஆன்மிக மலர்கள்

## பரிகாரங்களும், பலன்களும்



- பசியோடு வருபவரை உபசரித்தால் மோட்சம் கிட்டும்.
- பசுவிற்கு பசும்புல், அகத்திக்கீரை, பழம் தந்தால் பிள்ளை வரம் கிடைக்கும்.
- துளசிச் செடி நட்டாலோ அல்லது அதற்கு தண்ணீர் ஊற்றினால் பாவம் அகலும்.
- மலர்ச்செடிகள் நட்டு வைத்தால் மங்கலங்கள் பெருகும்.
- ஆலயங்களைச் சுத்தம் செய்து கோலமிட்டால் ஆண்டவனின் அருள் கிடைக்கும்.
- தொழு நோயாளிக்கு வயிராற விருந்து படைத்தால் கர்மம் அகலும்.
- தினசரி தியானம் செய்வதால் நிம்மதியும், ஞானமும் கூடிவரும்.
- காக்கைக்கு காலையில் உணவிட்டால் பித்ருக்களால் நன்மை உண்டாகும்.
- உழவாரப் பணிகளை (கோவிலுக்கு சேவை செய்வது) மேற்கொண்டால் பிறவிப் பயனை அடைய இயலும்.

# காசி விஸ்வநாதர் ஆலயம்

முக்தித் தரும் தலங்கள் ஏழு, அதில் காசியும் ஒன்று. இந்தியாவின் முதன்மையான ஜோதிர்லிங்கத் தலம். இங்குள்ள விஸ்வநாதர் ஆலயத்தின் கோபுரம் 51 அடி உயரமுள்ளது. முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்பால் தொன்மையாக கோயில் அழிக்கப்பட்டது.

தற்போது உள்ள ஆலயத்தை 1785ல் மகாராணி அகல்யா பாய் கட்டினார். கோவிலின் உள்ளே நேபாள அரசரால் வழங்கப்பட்ட ஒரு பெரிய மணி உள்ளது. இந்த மணியின் நாதம் வெகு தொலைவிற்கு ஒலிக்கும் என்பது இதன் சிறப்பம்சம். ஆலயத்தின் உள்ளே உள்ள கிணற்றில் பழமையான லிங்கம் வைக்கப்பட்டிருப்பதாய் ஐதீகம். காலை 3.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை திறந்திருக்கும் இவ்வாலயத்தின் வழிபாடு சிறப்புமிக்கது. குறிப்பாக இரவில் நடக்கும் சப்தரிஷி பூஜை மிகமுக்கியமானது. வழிபாட்டிற்கான பூசை பொருட்கள் காசி நகரத்தார் சத்திரத்திலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாலயத்தில் தனிச்சன்னதியில் அகில உலகத்தும் உணவளிக்கும் அன்னை அன்னை ஸ்ரீ அன்னபூரணி எழுந்தருளியுள்ளாள். காசி விஸ்வநாதரை நம் கையால் தொட்டு வணங்கலாம் என்பதும், அபிஷேகம் செய்யலாம் என்பது மற்றொரு சிறப்பு.

# பஞ்ச கவ்யம் அபிஷேகம்

சைவ சமயத்தில் சிவபெருமானுக்கு அபிஷேக பிரியர் எனவும், நம் பெருமானுக்கு அபிஷேகமே மிகவும் பிடித்தமானதும் என கூறுவர்.

அபிஷேகத்தில் மிகவும் பிடித்த அபிஷேகம் எது என்றால் “பஞ்ச கவ்யம்” அதாவது ஆனைந்து என்று பொருள்படும்.

பால், தயிர், நெய், கோசலம், கோமியம் (பசும்சாணம்). இவை ஒன்றாக கலந்ததுதான் ஆனைந்து என்கிற பஞ்சகவ்யம்.

முன்பெல்லாம் திருக்கோயில்களில் முதலில் இவ் அபிஷேகம் செய்துதான் ஏனைய அபிடேகத்தை செய்வார்கள்.

ஆனால் இன்றோ ஒரு குறிப்பிட்ட சிவாலயத்தை தவிர மற்றைய ஆலயங்களில் சோம்பலின் காரணமாக சிவலிங்கத்திற்கு பஞ்ச கவ்யம் அபிஷேகம் செய்வதில்லை.



மேலும், சிவ பூஜை செய்வோர் கூட பஞ்ச கவ்யம் அபிஷேகம் செய்ய வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

திருமுறைகள், ஆகமங்கள் புராணத்தில் கூட பஞ்ச கவ்யம் அபிஷேகம் சிறப்பாக பேசப் படுகிறது. ஆனால் தற்போது இவ் அபிஷேகம் செய்வதில்லை நாளடைவில் அபிஷேகத்தில் இருந்து விலக்கிக் கொண்டிருக்கி றோம் என்பது வேதனைக்குரியது.

– தொண்டீசன் ஈரோடு



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# காகத்தை வைத்து சகுனம் பார்க்க எளிமையான வழிமுறைகள்

காகத்தை நமது முன்னோர்களின் மறு வடிவமாக பார்த்தனர் நமது முன்னோர்கள். அந்த வகையில் காகத்தை வைத்து ஒருசில நல்லது கெட்டதை தீர்மானிக்கவும் செய்தனர். காகத்தின் ஒரு சில செய்கைகள் மனிதர்களுக்கு நடைபெறப்போகும் ஒருசில நிகழ்வை குறிப்பதாக அமைந்ததால் அக் காகத்தை வைத்து சகுனம் பார்க்கும் ஒரு அரிய கலையை நமது முன்னோர் உருவாக்கிவைத்தனர். கூடி வாழும் தத்துவத்திற்கு காகத்தையே முன்னுதாரனமாகவும் வைத்திருந்தனர் நமது முன்னோர். காகம் எந்த உணவையும் தனக்கென்று சேர்க்காமல், பிற காகங்களுக்கும் கொடுத்து பகிர்ந்து உண்ணும் சிறப்பியல்பை கொண்ட பறவையாகும்.



- ஒருவர் யாத்திரைக்கு புறப்படும் போது, காகம் எந்தப் பொருளைத் தன் அலகால் கொண்டு வருகிறதோ, அந்தப் பொருளின் வகையிலான லாபம் பயணத்தில் கிட்டும்.
- ஒருவருடைய பயணத்தின் போது, அவரது வாகனம், குடை, காலணி அல்லது அவருடைய உடல் மற்றும் நிழல் ஆகியவற்றை காகம் தன் சிறகால் தீண்டினால், அகால மரணம் அவருக்கு நேரிடலாம்.
- ஒருவரின் பயணத்தின் போது காகம் வலமிருந்து இடம் போவது தன லாபத்தையும், இடமிருந்து வலம் போனால் அது தன நஷ்டத்தையும் உண்டாக்குமாம்.
- வெளியில் பயணிக்கும் ஒருவரை நோக்கிக் காகம் கரைந்து கொண்டே பறந்து வந்தால், அந்த பயணத்தைத் தவிர்த்து விட வேண்டுமாம்.
- வெளியில் செல்லும் போது, ஆண் மற்றும் பெண் காகங்கள் ஒன்றாக இருந்து கரைந்து கொண்டிருந்தால், அவர்களின் வீட்டில் பெண்களின் சேர்க்கை ஏற்படுமாம்.
- ஒருவரின் வாகனம், குடை, காலணி ஆகியவற்றின் மீது காகம் எச்சம் விட்டால், அவர்களின் பயணத்தின் போது, உணவுக்குப் பஞ்சம் இருக்காதாம்.
- ஒரு பெண்ணின் தலையில் ஏந்தியுள்ள குடத்தின் மீது காகம் அமர்ந்திருக்கும் காட்சியைக் கண்டால், தன லாபம் மற்றும் பெண்களால் பல நன்மை கிடைக்குமாம்.
- ஒருவர் பயணிக்கும் போது ஒரு காகம் மற்றொரு காகத்திற்கு உணவூட்டும் காட்சி தென்பட்டால், அவர்களின் பயணம் இனிதாகும்.

## காகம் எந்த திசையில் கரைந்தால் நல்ல சகுனம்?

- தென்மேற்கு திசையை நோக்கி கரைந்தால், குதிரை, தயிர், எண்ணெய், உணவு போன்ற உணவுகள் சேரும்.
- ஒருவருடைய வீட்டின் தென்கிழக்கு திசையை நோக்கிக் காகம் கரைந்தால், தங்கம் சேரும்.
- வடக்கு திசையை நோக்கி காகம் கரைந்தால் ஆடைகள், நல்ல உணவு மற்றும் வாகனங்கள் ஆகியவை கிடைக்கும்.
- வீட்டின் தெற்கு திசையை நோக்கி, கரைந்தால், உளுந்து, கொள்ளு போன்ற தானிய லாபம் கிடைக்கும்.
- மேற்கு திசையை நோக்கி காகம் கரைந்தால், மாமிச உணவு, மது வகைகள், நெல் முதலான தானியங்கள், முத்து, பவளம் போன்று கடலில் விளையும் பொருட்கள்,

ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர் மெயில் புக்

விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# கொடிய தோஷமான "பிரம்மஹத்தி"யையே போக்கும்

# காமத ஏகாதசி விரதம்

ராஜா திலீபன் குருவசிஷ்டரிடம், "குருதேவா, சித்திரை மாதம்சுக்லபட்சத்தில் வரும் ஏகாதசி திதியின்பெயர் என்ன? அன்று ஆராதிக்க வேண்டியதெய்வம், பூஜை விதிகள் இவற்றைப் பற்றிஅறிந்து கொள்ள விரும்புகிறேன். ஆகையால் அனைத்தையும் தாங்கள்கிருபை கூர்ந்து விவரமாக கூறவேண்டும்." என்றான்.

அதற்கு பதிலளிக்கையில் மஹரிஷி வசிஷ்டர், "ராஜன்! சித்திரை மாதம் சுக்லபட்சத்தில்வரும் ஏகாதசி, காமதா ஏகாதசி என்று அழைக்கப்படுகிறது. இவ் ஏகாதசி விரதமானது அனுஷ்டிப்பவர்களின் சகலவிதமான பாவங்களையும் நீக்கிமோட்சப் பிராப்தியை அளிக்கும் சக்திவாய்ந்தது. உலர்ந்த விறகானது அக்னியின்தொடர்பால் எப்படி எரிந்து சாம்பலாகிறதோ, அதே போல் காமதா ஏகாதசி விரதத்தின் புண்ணியபலனின் பிரபாவம், சகல விதபாபங்களையும் நீக்குவதோடு, புத்ரபிராப்தியையும் அளிக்கிறது. இவ்விரதம் அனுஷ்டிப்பதால் கர்ம வினையின் காரணமாக இழி நிலை பிறவி எடுத்தவர்அதிலிருந்து விடுதலை பெறுவதுடன், இறுதியில் ஸ்வர்க்க லோகப் பிராப்தியையும் பெறுவர். இப்போது உனக்கு, இவ் ஏகாதசியின் மஹாத்மிய கதையை கூறுகிறேன். கவனத்துடன்கேள்." என்றார்.



பழங்காலத்தில் போகீபுர் என்னும் நகரை புண்டரீகன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனது ஆட்சியில் நகரானது அனைத்து வளங்களும் பெற்று ஐஸ்வர்யத்துடன் விளங்கியது. அந்நகரில் அநேக அப்சரஸ், கந்தர்வர், கின்னரார் வசித்து வந்தனர். அதில் சங்கீதத்தில் நிபுணத்துவம் பெற்ற லலித் மற்றும் லலிதா என்னும் கந்தர்வ தம்பதியினர் அழகான மாளிகையில் உல்லாசமாக வாழ்ந்துவந்தனர். இருவருக்கும் இடையில் கற்பனையில் கூட பிரிவு என்பதை ஏற்க இயலாத அளவு இருவரும் ஒருவர் மேல் ஒருவர் ப்ரேமையும், காதலும் கொண்டிருந்தனர். ஒரு முறை அரசன்புண்டரீகன் இசையரங்கத்தில் கந்தர்வர்களுடன் அமர்ந்து சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்தான். அங்கு மற்ற கந்தர்வர்களுடன் சேர்ந்து கந்தர்வனான லலித்தும் பாடி மகிழ்வித்துக் கொண்டிருந்தான். அச்சமயம் அவனுடையகாதல் மனைவியான லலிதா அங்கு இருக்கவில்லை. பாடிக் கொண்டிருந்த லலித்துக்கு திடீரென்று அவளது நினைவு எழ, அதன் காரணமாக சுருதி விலகி பாடலை தவறாக பாட நேர்ந்தது.

அதைக்கண்ட நாகராஜனான கார்கோடகன் அரசன் புண்டரீகனிடம் அவனைப் பற்றி புகார் செய்தான். அதை விசாரித்த அரசன் புண்டரீகன், லலித் மீது மிகுந்த கோபம் கொண்டு,

"துஷ்டனே! துர்மதி பெற்றவனே! என் முன்னிலையில் பாடல் பாடும் பொழுது கூட உன் மனைவியை நினைத்துக் (ஸ்மரணம்) கொண்டிருந்து சங்கீதத்திற்கு அவமரியாதை செய்துள்ளாய்.

ஆதலால் உன்னுடைய இந்த பாபவினையின் தண்டனையாக, நீ நரமாமிசம் தின்னும் ராட்சஸான ஆக மாறுவாய்"என்று சாபம் இட்டான். அரசனின் சாபம் பெற்ற கந்தர்வன் லலித் அக்கணமே கோர வடிவுடைய ராட்சஸனாக மாறினான். அவனுடைய முகம் காண்பவர்களுக்கு அச்சத்தையும், பயத்தையும் அளிக்கக் கூடிய பயங்கரரூபத்தை பெற்றது. கண்கள் இரண்டும் சூரிய, சந்திரனைப் போன்று கனன்று ஒளியை உமிழ்ந்து கொண்டு இருந்தன. வாயிலிருந்து அக்னி பிழம்புகள் வெளிவந்து கொண்டிருந்தது. அவனது மூக்கு மலையின் கீழ் உள்ள குகையைப் போன்றும், கழுத்து மலையைப் போன்றும் விளங்கியது. ராட்சஸனாக மாறி கந்தர்வன் லலித் மிகுந்த துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தது.

ப்ரியத்துக்கு உரிய தன் நேசனுக்கு நேர்ந்ததைக் கேட்ட லலிதா மிகுந்ததுக்கமும், மனவேதனையும் கொண்டு, தன்கணவரை இந்நிலையிலிருந்து விடுவிக்க எங்கு செல்வது, என்ன செய்வது என்று அறியாது திகைத்தாள்.

எப்படி தன்கணவரை இந்த நரகத்திலிருந்து மீட்பது என்று யோசித்தாள். ராட்சஸனாக மாறிய கந்தர்வன் லலித் காட்டில் இருந்துக் கொண்டு அநேக பாபங்களை செய்ய ஆரம்பித்தான். அவனுடைய மனைவி லலிதை அவன் செல்லுமிடமெல்லாம் பின்தொடர்ந்து அவனுடைய நிலையை எண்ணி வருந்தினாள். இப்படியாக தன் கணவனை பின் தொடர்ந்து இறுதியில் விந்தியாசல்பர்வதத்தை அடைந்தாள். அங்கு அவள் சிருங்கி முனிவருடைய ஆசிரமத்தைக் கண்டாள். ஆசிரமத்தைக் கண்டதும் உடனடியாக அதனுள் சென்று முனிவரை நமஸ்கரித்து பின் வினயத்துடன் அவரிடம்," முனிவரே!, நான் வீர்தன்வா என்னும் கந்தர்வனின் மகள். என் பெயர் லலிதா. என் கணவர் அரசன் புண்டரீகனின் சாபத்தால் கோர ராட்சஸனாக மாறிவிட்டார். அவருக்கு நேர்ந்த இந்த துர்பாக்கிய நிலைமை எனக்கு மிகுந்த துக்கத்தையும், வேதனையையும் அளிக்கிறது. மேலும் நித்தமும் அவர் படும்பாட்டைக் கண்டு நான் சொல்லவொண்ணா வேதனையை தவித்துக் கொண்டு இருக்கிறேன். முனி சிரேஷ்டரே!, தாங்கள் தான் கருணையுடன் என் கணவர் இந்நிலையிலிருந்து விடுதலை பெற ஏதாவது சிறந்த உபாயத்தை கூறவேண்டும்." என்று பிரார்த்தித்தாள்.

லலிதையின் கதையைக் கேட்ட சிருங்கி முனிவர், "கந்தர்வ கன்னிகையே, சித்திரை மாதம் சுக்ல பட்சத்தில் வரும் ஏகாதசியை காமதா

www.aanmeegamalar.com






www.aanmeegamalar.com

ஏகாதசி என்று அழைப்பர். அன்று ஏகாதசி விரதத்தை விதிப்பூர்வத்துடன் உபவாசம் இருந்து அனுஷ்டித்தால் மனிதர்களின் அனைத்து காரியங்களும் சீக்கிரமே சித்தி அடையப் பெறும். அன்று நீவிரதம் அனுஷ்டித்து அவ்விரத புண்ணியபலனை உன் கணவருக்கு அளித்தால், அரசனின் சாபத்தால் ராட்சஸ ரூபத்தை அடைந்த உன் கணவன் அதிலிருந்து விமோசனம் பெறுவான்.” என்று ஆசீர்வதித்தார்.முனிவரின் வார்த்தைகளின்படி லலிதா ஆனந்தத்துடன் காமதா ஏகாதசி விரதத்தை விதிப்பூர்வமாக அனுஷ்டித்தாள்.

மறு நாள் துவாதசியன்று பிராம்மணர் முன்னிலையில் தான் பெற்றவிரத புண்ணிய பலனை கணவருக்கு அர்ப்பணித்தாள் பகவான் மஹாவிஷ்ணுவை வணங்கி, “ஹே பிரபோவாசுதேவா, ஏகாதசி விரதம் அனுஷ்டித்து நான் பெற்ற புண்ணிய பலன் அவரை சேர்ந்து, அதன் பிரபாவத்தால் அவர் சாபத்திலிருந்து விடுதலை அடைய தங்களை பிரார்த்திக்கிறேன்.” என்று வேண்டிக் கொண்டாள். ஏகாதசி விரதத்தின் புண்ணிய பலனால் அவள் கணவன் லலித் ராட்சஸ ரூபத்திலிருந்து விடுதலை பெற்று தன் பழைய கந்தர்வ சொரூபத்தை அடைந்தான். அழகிய ஆடை, ஆபரணங்களுடன் தன் மனைவி லலிதாவுடன் மீண்டும் ஆனந்தமாக வாழத் தொடங்கினான்.

காமதா ஏகாதசியின் பிரபாவத்தால் முன்பை விட மிகவும் செழிப்புடன் இருவரும் வாழ்ந்தனர்.இறுதியில் இருவரும் புஷ்பக விமானத்தில் அமர்ந்து ஸ்வர்க்கலோகப் பிராப்தியையும் பெற்றனர்

இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் அனைத்து பாபங்களும் நீங்குகிறது. இவ் விரதத்தின் புண்ணிய பலனானது பிரம்மஹத்தி போன்ற கொடிய பாபங்களிலிருந்தும், மனிதசொரூப இல்லா இதர யோனி பிறவிகளிலிருந்தும் விடுதலை அளிக்கிறது. உலகத்தில் இவ்விரதத்திற்கு நிகரான விரதம் வேறெதுவும் இல்லை. காமதா ஏகாதசி விரத கதை (அ) மஹாத்மியம் கேட்பவருக்கும், படிப்பவருக்கும் அத்யந்த பலனை அளிக்கக்கூடியது.



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com





சம்மணங்கால் இட்டு சாப்பிடுவது

# ஆரோக்கியத்திற்கு சிறந்தது

இந்தியர்கள் ஏன் சம்மணம் இட்டு சாப்பிடுகின்றனர் என்ற ஆராய்ச்சி நடைபெற்றது அதன் முடிவில் “சம்மணங்கால் இட்டு சாப்பிடுவது தான் ஆரோக்கியத்திற்கு சிறந்தது” என அறிவிப்பு வெளியிட்டது.

## இரத்த ஓட்டம்!

நமது உடலை இடுப்பை மையமாக வைத்து, கீழ் உடல், மேல் உடல் என இரண்டாக பிரிக்கலாம். இதில் முக்கியமான உடல் உறுப்புகள் பல மேல் உடலில் தான் இருக்கிறது. கீழ் உடலில் கால்கள் மட்டுமே இருக்கின்றன.

நடக்கும் போது மட்டும் தான் இரத்த ஓட்டம் கால்களுக்கு தேவைப்படுகிறது. மற்ற வேளைகளில் மேல் உடலில் இருக்கும் கண், காது, மூளை, கணையம், நுரையீரல், சிறுநீரகம், போன்றவைக்கு தான் இரத்த ஓட்டம் அதிகமாக தேவைப்படுகிறது.

## சக்தி!

சாப்பிடும் போது கீழே தரையில் சம மணங்கால் இரட்டு அமர்ந்து உணவு உட்கொள்வதால் உடலுக்கு சக்தியும், ஆரோக்கியமும் அதிகம் கிடைக்கிறது.

## காலை மடக்கி அமர்தல்!

காலை மடக்கி அமரும் இந்த நிலை உணவு உட்கொள்வதால், சாப்பிடும் போது மேல் உடலுக்கு தேவையான அளவு இரத்த ஓட்டம் செல்லும். இது மேல் உடல் பாகங்களின் செயற்திறனை ஊக்குவிக்கும்.

## செரிமானம்!

முக்கியமாக, சம்மணங்கால் இட்டு உணவு உட்கொள்வதால் செரிமான மண்டலம் வலுபெற்று, செரிமானம் சீராகவும், அஜீரண கோளாறுகள், வயிறு பிரச்சனைகள் உண்டாகாமல் இருக்கவும் உதவும்.

## கீழே கால்களை தொங்கவிடுதல்

மாறாக, நீங்கள் கால்களை தொங்கவிட்ட நிலையில் அமர்ந்து உணவு உட்கொள்ளும் போது, போதுமான இரத்த ஓட்டம் மேல் உடலுக்கு செல்லாமல். தேவையின்றி கீழ் உடலுக்கு கால்களுக்கு செல்லும். இதனால் மேல் உடலின் செயற்திறன் பாதிக்கப்படும்.

## இன்று முதல்.

எனவே, உணவை கீழே அமர்ந்து உட்கொள்வது கேவலமோ, கவுரவ குறைச்சலோ இல்லை என்பதை புரிந் துக் கொண்டு. இது முற்றிலும் ஆரோக்கியம் சார்ந்தது என்பதால், கீழே சம்மணங்கால் இட்டு அமர்ந்து சாப்பிடும் பழக்கத்தை இன்று முதலே பின்தொடருங்கள்!



# வீட்டில் செல்வம் பெருக
# வியாழக்கிழமை
# கடைபிடிக்க வேண்டியவை

குரு நவகிரகங்களில் மிகவும் முக்கியமானவராகவும், சிறப்பானவராகவும் கருதப்படுகிறார். ஒருவருடைய ஜாதகத்தில் குரு வலிமையாக இருந்தால், அந்த நபர் வாழ்வில் எதிலும் வெற்றி காண்பவராக இருப்பார்.

இத்தகைய குருவிற்கு உகந்த நாள் வியாழன். இந்த நாளில் குறிப்பிட்ட விஷயங்களை செய்து வந்தால், வீட்டில் செல்வம் அதிகரிக்கும். வியாழக்கிழமை என்ன செய்தால் செல்வம் அதிகரிக்கும் எனப் பார்போம்...!

**விஷ்ணு பகவானை வணங்குவது:**

சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்து குளித்தப் பின், விளக் கேற்றி விஷ்ணு பகவானை வணங்க வேண்டும்.

**தானம்:**

வியாழக்கிழமை களில் மஞ்சள் நிற பொருட்களை தானம் வழங்கினால், செல்வமும், அதிர்ஷ்டமும் கொட்டும்.

**விரதம்:**

வியாழக்கிழமை களில் குருவை வணங்கி விரதம் இருந்தால் செல்வந்தர் ஆகலாம். சிவ பெருமானுக்கு வியா ழக்கிழமைகளில் மஞ்சள் லட்டுவை படைத்து வணங்கி னால், அதிர்ஷ் டமும், செல்வமும் அதிகம் வந்து சேரும்.

**வாழைமரம்:**

வியாழக்கிமைகளில் வாழை மரத்திற்கு மஞ்சள் நிற இனிப்பு பலகாரம் எதையேனும் படைத்து வணங்கி, மஞ்சள் நிற உடைகளை தானமாக வழங்கினால், உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**வாழைப்பழம்:**

வியாழக்கிழமைகளில் வாழைப்பழத்தை தானம் வழங்கி வந்தால், அது ஒருவரது வீட்டில் செல்வ வளத்தை அதிகரிக்கும்.

**சாமந்தி மாலை:**

மஞ்சள் நிற சாமந்திப்பு மாலை யை விஷ்ணு பகவானுக்கு படைத்தால், விஷ்ணு பகவான் ஆனந்தமாகி, வீட்டில் செல்வம் பெருக செய்வார்.

**மந்திரம்:** வியாழக்கிழமைகளில் ‘ஓம் நமோ நாராயணாய” என்னும் மந்திரத்தை சொல்லிக் கொண்டே இருங்கள். இதனால் வீட்டில் செல்வம், அதிர்ஷ்டம், சந்தோஷம் போன்றவை அதிகரிக்கும்.



தட்சிணாமூர்த்திக்கு 24 வடிவங்கள் முக்கியமானவை அவை பின் வருமாறு..

1. திருவெண்காடு வீராசனர்
2. திருமாந்துறை யோக வீராசனர்
3. கும்பகோணம் கங்கா கிருபாகரன்
4. திருவையாறு குருபரர்
5. திருவீழிமிழலை பத்மபாதர்
6. திருவாரூர் ஜகத் வீராசனர்
7. மாங்குடி குரு உபதேசர்
8. கஞ்சனூர் அக்னி தட்சிணாமூர்த்தி
9. கருவிலி பவ அவுஷதர்
10. ஆலங்குடி மகா தட்சிணாமூர்த்தி
11. திருவிடைமருதூர் சாம்பவி தட்சிணாமூர்த்தி
12. மயிலாடுதுறை மேதா தட்சிணாமூர்த்தி.
13. மதுரை சித்த பரமேஸ்வரர்
14. காசி. திருநெல்வேலி தாரகேஸ்வரர்
15. பெருவேளூர், திருவிடைக்கழி ஸந்த உபதேசிகள்
16. கொல்லம்புதூர் அந்தண உபதேசிகர்
17. திருநாவலூர் ஊழி முதல்வர்
18. திருப்புறம்பயம் அறம் பயந்த பெருமாள்
19. திருநாவலூர் ஊழி முதல்வர்
20. திருப்பெருந்துறை அருவ தட்சிணாமூர்த்தி
21. தென் திருவாலங்காடு வம்ச விருத்தீஸ்வரர்
22. தக்கோலம் உத்குடி தாசனார்
23. ஓமாம்புலியூர் ஓங்கார ரூபர்
24. கேதார்நாத் கவுரி அனுகிரகர்.

– தமிழாலயமணி


BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com

SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,

89394 99598

New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024. Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699




ஆன்மிகமலர் மெயில் புக்
16–30 ஏப்ரல் 2017 37
www.aanmeegamalar.com

# மனிதனுடைய மனம் தராசுக்கோல் போன்றது

- ஒருவனுக்கு உண்மைப் பக்தி தோன்றி, அவன் சாதனைகள் செய்யவிரும்பினால் பகவான் நிச்சயமாக அவனுக்குத் தகுந்த குரு ஒருவனை ஏற்படுத்துவார். அதைப்பற்றிய கவலையே வேண்டியதில்லை.
- செம்பொன்னிற்கும், பித்தளைக்குமுள்ள வேறுபாடு உரைகல்லில் உரைப்பதால் தெரியவரும். அதுபோல நல்லவரையும், அல்லாதவரையும் அவரவர்களுடைய பக்தியினால் அறிய முடியும்.
- விவேகமும் வைராக்கியமும் இல்லாமல், வேதநூல்களைக் கற்பதால் எந்தப்பயனுமில்லை.
- உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே சாதனைகள் செய்து மனத்தை அடக்கி ஆள்பவனே உண்மை வீரன்.
- மனிதனுடைய மனம் தராசுக்கோல் போன்றது. இந்த மனத்தராசின் இருதட்டுகளில் இரண்டு வித எடைகள் உள்ளன. உலகத்தின் மீதும், பட்டம், பெருமை இவற்றின் மீதும் உள்ள பற்று ஒன்று. மற்றொ ன்று அறிவு, பற்றின்மை, கடவுளிடம் அன்பு முதலியவை.
- வெட்கம், வெறுப்பு, அச்சம் இவை மூன்றும் நம்மிடம் உள்ள வரையில் நமக்கு ஈசுவர தரிசனம் கிடைக்காது.
- கடவுளை அடைவதற்குப் பாதைகள் பல உள்ளன. ஒவ்வொரு தரிசனமும் ஒரு மார்க்கமே ஆகும்.

